வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 பக்கங்கள் : 16 விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu




07.01.2021 வியாழக்கிழமை

# தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வே தேவை

## அரசிடம் வலியுறுத்தினார் ஜெய்சங்கர்



கொழும்பு, ஜன. 07

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் தீர்வை வழங்குவது அரசின் பிரதான கடப்பாடு என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

02

# இலங்கை ஓர் ஐக்கியமான பிரிக்கப்படமுடியாத நாடு

## புதிய அரசமைப்பு தொடர்பான நிலைப்பாட்டை நேற்று வெளிப்படுத்தியது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஜன.07

இலங்கையின் புதிய அரசமைப்பு தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வெளியிடப்பட்டுள்ளது.

ஒன்றுபட்ட நாடாக நிலைபேறான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கி நகர வேண்டுமாயின், புதிய அரசமைப்பொன்று அவசியம் என தமிழ்த் தேசி

02

# இந்திய அரசின் அக்கறைக்கு நன்றி கூறியது கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 07

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் முன்வைத்துள்ள கருத்துகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில்

02

# சகல இன மக்களும் ஏற்கும் அரசமைப்பு நாட்டில் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன.07

சர்வதேசத்தை வெற்றிகொள்ளக்கூடிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதாக இருந்தால், முழு பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொண்டு அதனை மேற்கொள்ளவேண்டும். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நாட்டில் அரசமைப்பு இல்லாமையே சர்வதேச பிரச்னை

02

# தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையாக வரைபைத் தயாரிக்க இணக்கம்

## மூவர் அடங்கிய குழுவும் நியமனம்

கொழும்பு, ஜன. 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய மூன்று தமிழ்க் கட்சிகளும் ஒற்றுமையாக ஐ.நாவின் புதிய பிரேரணைக்கான முன்மொழிவு வரைபைத் தயாரிக்க இணக்கம் கண்டுள்ளன.

கொழும்பில் நேற்று மாலை நடைபெற்ற சந்திப்பிலேயே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

முன்மொழிவு வரைபைத் தயாரிக்க மூவர் அடங்கிய குழுவும் இதன்போது நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அதன் பேச்சா

02

# அடிப்படைவாத குழுக்களே உடல் தகனத்துக்கு எதிர்ப்பு

## அமைச்சர் விமல் வீரவன்ஸ சீற்றம்



கொழும்பு, ஜன.07

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடலை தகனம் செய்யும் விவகாரத்தில், நாட்டிலுள்ள அனைத்து மக்களும் எதிர்ப்பை வெளியிடவில்லை. முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களே, எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றன என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

02



# கோட்டாபய-ஜெய்சங்கர் நேற்று முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜன. 07

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று

02

# நிபுணர் குழு பரிந்துரை கிடைத்தவுடன் கொரோனா தடுப்பூசிகள் தருவிப்போம்

## சபையில் கூறினார் சுகாதார அமைச்சர் பவித்ரா



கொழும்பு,ஜன.07

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர முன்னர் அதன் தரம், அதனால் ஏற்படும் பக்க விளைவுகள் தொடர்பில் ஆராய வேண்டியுள்ளதுடன் இதுதொடர்பில் ஆராய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தொற்று நோய் தொடர்பில் ஆராயும் நிபுணர் குழுவின் பரிந்துரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றவுடன் இந்தத் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என சுகாதார அமைச்சர் பவித்ரா

02



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்றிரவு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## நிபுணர் குழு...

வன்னியாராச்சி தெரிவித்தார்.

மேலும் கொரோனா வைரஸ் பரவலை நாட்டில் கட்டுப்படுத்தும் விதமாக அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இதில் பிரதான கடமைகளை சுகாதார அமைச்சும், பாதுகாப்புத் துறையினர் மற்றும் அரச புலனாய்வுத்துறையின் முழுமையான ஒத்துழைப்புடனும் தனியார் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு வெற்றிகரமாக இவற்றைக் கையாண்டு வருகின்றோம்.

சகல மாவட்டங்களிலும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படுவதுடன், சட்ட விரோதமாக நாட்டுக்குள் நுழையும் வாய்ப்புக்கள் உள்ள சகல இடங்களையும் பலப்படுத்துவதுடன் அவ்வாறான பகுதிகளிலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதும், வெளிநாடுகளிலிருந்து வரும் சகலருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பதும், அவர்களை 14 நாள்கள் தடுத்து வைத்திருந்து மீண்டும் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுப்பது என்ற காரணிகள் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

அதேபோல் இலங்கைக்குள் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை பெற்றுகொடுக்க ஏற்றுகொள்ளப்பட்ட வழிமுறைகளை கையாள்கிறோம். அதற்கமைய சுகாதார பணிப்பாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள தொற்றுநோய் தடுப்பு பிரிவினரை உள்ளடக்கிய நிபுணர் குழு இந்த விடயங்களை கையாண்டு வருகின்றனர்.

இப்போது வரையிலும் குறித்த நிபுணர் குழு உலகில் இதுவரையில் கண்டறியப்பட்டுள்ள தடுப்பூசிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். அதேபோல் தடுப்பூசியை கொண்டுவருதால் அதனை களஞ்சியப்படுத்தும் முறைமை மற்றும் அதற்கான செலவுகள் குறித்தும் உப குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகின்றது. - என்றார். (அ-எ)

## இந்திய அரசின்...

நன்றி தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, சமத்துவம், நியாயங்கள், சமாதானம் மற்றும் கௌரவமாக வாழும் உரிமை என்பன ஐக்கிய இலங்கைக்குள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார். அத்துடன் அதிகாரப் பகிர்வு விடயத்தில் அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்தும் இலங்கை அரசு நல்லதொரு முன்னேற்றகரமான செயற்பாட்டை கையாளும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், அவர் முன்வைத்துள்ள இந்தக் கருத்துக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் நேற்று உரையாற்றும் போது கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச் சட்டக் கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சற்று நேரத்துக்கு முன்னர் முன்வைத்துள்ள கருத்தொன்றை சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இலங்கையின் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் தமது ஒத்துழைப்புகள் நீண்டகாலமாகக் காணப்பட்டு வருகின்றன எனவும், அதேபோல் இலங்கையின் அரசியல் தளத்தில் இன ரீதியிலான ஒத்துழைப்பைத் தாம் எதிர்பார்க்கின்றோம் எனவும் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, சமத்துவம், நியாயங்கள், சமாதானம் மற்றும் கௌரவமாக வாழும் உரிமை ஐக்கிய இலங்கைக்குள் வெற்றிகரமாக இடம் பெறும் எனத் தாம் எதிர்பார்க்கின்றோம் எனவும், இதில் அதிகாரப் பகிர்வு விடயத்திலும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் இலங்கை அரசு நல்லதொரு முன்னேற்றகரமான செயற்பாட்டைக் கையாளும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்தக் கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

அதேபோல் ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு உறுதிப்பாடு ஒன்றைக் கொடுத்துள்ளார். அதாவது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் எனச் சகலரதும் நலன்களுக்காகத் தான் அர்ப்பணிப்புடன் செயற்பட எதிர்பார்க்கின்றேன் என ஜனாதிபதியும் வாக்குறுதியளித்துள்ளார். அரசின் உண்மையான எதிர்பார்ப்பு இதுவென்றால் அதற்காக எமது முழுமையான ஒத்துழைப்பை அரசுக்கு வழங்க நாம் தயாராக உள்ளோம்- என்றார்.

## தமிழ்மக்களின்...

இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நேற்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினர். அதன் பின்னர் இருவரும் இணைந்து அமைச்சில் கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டையும் நடத்தினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இந்தியாவின் மிக நெருங்கிய பங்காளரான இலங்கைக்கான பயணத்துடன் 2021ஆம் ஆண்டை ஆரம்பிப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கொரோனா வைரஸ் பரவலால் இரு நாடுகளும் ஒரேவிதமான சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையிலேயே நான் இங்கு வருகை தந்திருக்கிறேன். எனினும், பரஸ்பரம் ஒத்துழைப்புடன் ஒருமித்து செயலாற்றக்கூடிய வாய்ப்பையும் அது ஏற்படுத்தியிருக்கிறது.

தற்போது கொரோனா பரவலின் பின்னரான ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் இந்தியாவிடமிருந்து இலங்கை தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்வது குறித்தும் ஆராய்ந்தோம்.

பரஸ்பர நம்பிக்கை, கௌரவம் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையுடனான நல்லுறவை மென்மேலும் வலுப்படுத்திக்கொள்வதில் இந்தியா எப்போதும் அக்கறை கொண்டிருக்கின்றது.

அண்மைக் காலத்தில் இந்தியாவின் பொருளாதாரம் மீண்டு வருவதுடன் இது இலங்கையின் மீது நேர்மறையான நன்மைகளையே ஏற்படுத்தும். பெரும்பாலான இந்திய வணிகங்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காண்பித்து வருகின்றன.

மேலும், இலங்கையின் நீண்டகால நல்லிணக்க செயற்பாடுகளையும் இனங்களுக்கு இடையிலான அமைதியை நிலைநாட்டுவதற்கான அனைத்து மக்களையும் உள்ளடக்கிய அரசியல் கொள்கையையும் இந்தியா ஊக்குவிப்புதுடன் அவற்றை அடைந்துகொள்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கும். அதுமாத்திரமன்றி ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளான நீதி, சமாதானம், சமத்துவம், கௌரவம் ஆகியவை உறுதி செய்யப்பட்ட வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் உள்ளடங்கலாக அர்த்தமுள்ள அதிகாரப்பரவலாக்கத்தை வழங்குவதற்கான அரசின் கடப்பாடுகளும் இதற்குள் உள்ளடங்குகின்றன-என்றார். (அ)

## அடிப்படைவாத...

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தொற்று நாடளாவிய ரீதியில் பரவ ஆரம்பித்த தருணத்தில் எமது நாட்டின் சுகாதார அமைச்சு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்கள் எந்த மதத்தை சார்ந்தவர்கள் என்றாலும் அவர்களுடைய உடலை தகனம் செய்வதென்ற முடிவை எடுத்தது.

இந்தத் தீர்மானத்தை நாட்டின் அனைத்து இனத்தவரும் விவாதத்துக்கு உட்படுத்தவில்லை.

சிங்கள பௌத்தர்களும் உயிரிழந்தவர்களுடைய உடலை அடக்கம் செய்கின்றனர்.

அதேபோல் உயிரிழந்தவரின் உடலை தமது வீட்டில் சில தினங்களுக்கு வைத்திருந்து மத கிரியைகளைத் தொடர்ந்து அடக்கம் செய்யும் நடவடிக்கையையோ அல்லது தகனம் செய்யும் நடவடிக்கையினையோ மேற்கொள்கின்றனர்.

அதேபோன்று கத்தோலிக்கர்கள் தமது உறவினர்கள் இறக்கும் பட்சத்தில் அடக்கம் செய்வதனை மாத்திரமே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்துக்களில் பலரும் அடக்கம் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். - என்றார்.

## இலங்கை ஓர்...

யக்கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாக இந்த நிலைப்பாட்டினை அறிவித்துள்ளனர்.

நாட்டின் பல்லின, பன்மொழி மற்றும் பல்மதத் தன்மை உறுதிப்படுத்தப்படுவதும் பாதுகாக்கப்படுவதும் போற்றப்படுவதுமான ஓர் ஐக்கிய, பிரிபடாத, பிரிக்கமுடியாத நாட்டிற்கான தமது பற்றுறுதியை நாட்டுக்கு வழங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பின் அடிப்படை அம்சமும் அதன் அடிப்படைக் கட்டமைப்பும் பெரும்பான்மையினராக இருப்பினும் சிறுபான்மையினராக இருப்பினும் இலங்கை மக்களுக்கிடையிலான அடிப்படை இணைக்கப்பாட்டை பிரதிபலிக்க வேண்டும்.

அரசமைப்பின் விதித்துரைக்கப்பட்ட ஆட்சி அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டிய மத்திய மற்றும் பிராந்திய நிறுவனங்களைக் கொண்ட ஒரு சுதந்திரமான, இறையாண்மைமிக்க சுயாதீனமான மற்றும் ஐக்கிய குடியரசாக இலங்கை அங்கீகரிக்கப்படவேண்டும்.

அந்தப் பிராந்தியங்களில் ஒன்று வடக்கு- கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் ஆள்புலத்திற்கானதாக அமைதல் வேண்டும்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளை இலங்கை முழுவதும் அரச கரும மொழிகளாகவும் நிர்வாக மொழிகளாகவும் அரசமைப்பு அங்கீகரிக்க வேண்டும்.

பிரஜைகள் தாம் தெரிவு செய்யும் மொழியில் அரசாங்கத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பாடல் கொள்வதற்கான உரிமை இருக்க வேண்டும்.

சம்பிரதாயபூர்வமான ஒரு ஜனாதிபதியை அரசமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டும். பிரதமர் அமைச்சரவையின் தலைவராக இருக்கவேண்டும்.

மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு சபையையும் பிராந்தியங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டாவது சபையையும் கொண்டதாக இரு சபை சட்டவாக்கத்துறைக்கு அரசமைப்பு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

காணி அதிகாரம் பகிரப்பட வேண்டியதன் அவசியத்தையும் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-எ)

## கோட்டாபய...

முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

மூடிய அறைக்குள் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கொரோனா வைரஸ் நோய்க்கு சிகிச்சையளிக்க இந்தியா தயாரிக்கும் தடுப்பூசியை ஏனைய நாடுகளுக்கு வழங்கும் போது இலங்கைக்கு முன்னுரிமை அளிக்கத் தயாராக இருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கட்சிகள்...

ளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் அதன் முக்கியஸ்தர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பாக்கியசோதி சரவணமுத்து தலைமையில் நேற்று நடைபெற்ற மேற்படி சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரும் கலந்துகொண்டனர்.

## சகல இன...

கள் ஏற்படுவதற்கும் காரணமாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச் சட்டக்கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேசத்தை வெற்றி கொள்ளக் கூடிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதாக இருந்தால், முழு பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொண்டு அதனை மேற்கொள்ளவேண்டும்- என்றார். (அ-எ)

## இலங்கையின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷகூட தனது ஜனாதிபதி பதவிக்காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலும் சென்று வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை தாம் பூர்த்திசெய்ய தயாராக இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்போர ஒரு கடும்போக்கான நிலையைக் கொண்டிருப்பதோடு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையையும் நீக்கப்போவதாக கூறிவருகின்றனர்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு மாத்திரமல்ல. முழு இலங்கைக்குமே அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஒரு நல்ல வடிவமைப்பை கொண்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கட குறிப்பிட்டிருப்பது, இந்தியா எவ்வகையிலும் 13ஆவது திருத்தச்சட்டத்தையும் அதனோடிணைந்த மாகாணசபை நிர்வாக முறைமையையும் கை நழுவிச்செல்ல அனுமதிக்காது என்ற செய்தியையே வழங்குவதாக இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
07.01.2021 வியாழக்கிழமை
சார்வாரி, மார்கழி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் கைதிகளின் 'விடுதலை'

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்ந்தும் ஒரு பேசுபொருளாகவே இருக்கின்றது. இது தொடர்பில், தொடர்ந்தும் ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உண்மையிலேயே போற்றப்பட வேண்டிய விடயம்தான். பொதுவாக இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகள், விடயங்களை மறக்காமலிருப்பதற்கு வழிவகுக்கும். ஆனால், அரசாங்கத்தை இறங்கிவரச் செய்யுமா என்பது சந்தேகமே!

ஏனெனில், எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரில், அரசாங்கத்தின் மீது புதிய பிரேரணை ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று தமிழர் தரப்புக்கள் கோருகின்ற நிலையில், அரசாங்கம் அரசியல் கைதிகளின் விடுதலையை சாத்தியப்படுத்தும் என்று எதிர்பார்ப்பது கடினமே!

ஏனெனில், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அரசியல் கைதிகள் என்னும் ஒரு பிரிவினர் இல்லை. குற்றவாளிகளே இருக்கின்றனர். குற்றவாளிகளுக்கான பொது மன்னிப்பு என்றால், அதனை ஜனாதிபதியே வழங்க வேண்டும். மேலும், அரசியல் கைதிகள் விடயத்தில் கருணை காட்டுமாறு,ஏற்கனவே, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். ஆனாலும், இதுவரையில் ஜனாதிபதியின் பக்கத்திலிருந்து சாதகமான பதில் எதுவும் வரவில்லை. அத்துடன் இவ்வாறான எதிர்ப்புகளுக்கு தாங்கள் கட்டுப்படுவதான தோற்றத்தையும் இந்த அரசாங்கம் காண்பிக்க விரும்பாது. ஏற்கனவே, முஸ்லிம்களின் உடல் அடக்கம் செய்யப்படும் விவகாரத்தில், முஸ்லிம் சிவில் சமூகம் எதிர்ப்பை காண்பித்து வருகின்ற போதிலும்கூட, அரசாங்கம் இறங்கி வரவில்லை.

உண்மையில், பெரும்பாலான விடயங்களில் அரசாங்கம் என்று குறிப்பிடுவதையும்விட, ஜனாதிபதி என்று குறிப்படுவதே சரியானது. ஏனெனில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரமுள்ளவராக ஜனாதிபதி மட்டுமே இருக்கின்றார்.

ஜனாதிபதியின் கடைக்கண் பார்வை பட்டால் மட்டுமே கைதிகள் விடுதலை செய்யப்படுவர். ஆனால், ஜனாதிபதியும் ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கமும் சிங்கள மக்களின் ஆதரவுடன் ஆட்சியை கைப்பற்றியிருக்கின்ற காரணத்தினால், முதலில் சிங்களமென்னும் நிலைப்பாட்டிலேயே செயல்பட்டு வருகின்றனர். அவர்களது பேச்சுக்களில் அது மிகவும் வெளிப்படையாகவே தெரிகின்றது. ஒருவேளை, தமிழர்களை திருப்திப்படுத்தும் வகையில் சில விடயங்களை மேற்கொண்டால்கூட, எதிர்காலத்திலும் தமிழ் மக்கள் தங்களை ஆதரிக்கப் போவதில்லை. பெரும்பான்மையான தமிழ் வாக்களார்கள் தங்களுக்கு எதிராகவே வாக்களிப்பர் - எனவே, முதலில் சிங்களம் என்னும் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதன் ஊடாகவே, தங்களின் ஆட்சியதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளலாம் என்னும் பார்வையே அவர்களிடம் மேலோங்கியிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது, சிக்கலுக்குரிய ஒரு பிரச்னையாகவே தொடரப் போகின்றது. அரசியல் கைதிகளின் விடயத்தில் கருணை காண்பிக்கும் மனோபாவம் சிங்கள - பௌத்த மதபீடங்கள் மத்தியில் உருவாகுமானால், அவர்கள் மூலம் ஒரு கோரிக்கையை முன்வைக்கலாம். ஆனால், இதற்கு தமிழ் சிவில் சமூகம் வேறு வகைகளில் செயலாற்ற வேண்டும். எல்லோரும் இல்லாவிட்டாலும் கூட, இதில் மட்டும் கரிசனையுள்ள ஒரு குழுவினர் பௌத்த மதபீடங்களை அணுகிப்பார்க்கலாம்.

ஆனால், தமிழ்ச் சூழலிலுள்ள பிரச்னை, அனைவருமே, அனைத்து விடயங்களையும், ஒரே மாதிரியாகவே அணுக முற்படுகின்றனர். இதனால், சாத்தியமான புதிய வழிமுறைகளை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதில்லை. இது தொடர்பில் பௌத்த மதபீடங்களை அணுகிப் பார்க்கலாமா? - சிங்கள சிவில் சமூகங்களை அணுகிப் பார்க்கலாமா? அரசியல் கைதிகள் வெளியில் வரவேண்டுமென்று உண்மையிலேயே எண்ணுவோர், இவ்வாறான புதிய வழிமுறைகள் தொடர்பில் சிந்திக்கலாம்.

# இலங்கையின் 'கொவிட் இராஜதந்திரம்'

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரிடம், அரச தரப்பினர் உலகை அச்சுறுத்தி நிற்கும் கொவிட் -19 வியாதிக்கான தடுப்பூசியைப் பெறுவது பற்றி பிரஸ்தாபித்து இலங்கையின் தற்போதைய கரிசனையெல்லாம் கொவிட்-19 வியாதியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதாகவே இருக்கின்றது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தருணத்திலேயே இந்தியாவும் கொவிட்-19 வியாதிக்கான தடுப்பூசியை கண்டுபிடிப்பதில் சாதகமான நிலையை



எட்டியுள்ளதை அறிய முடிகின்றது.

எனவே, உலகையே அச்சுறுத்தும் பெரும் ஆட்கொல்லியான கொவிட்-19 வியாதியை தடுத்து நிறுத்தும் செயல்பாடுகளுக்கே இலங்கை தற்போது முன்னுரிமை அளித்துள்ளது என்ற ரீதியிலேயே இந்திய வெளியுறவு அமைச்சரிடம் இலங்கை தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் தற்போது உன்னிப்பாக இருந்து வருவதுடன் சீனாவின் கைப்பாவைகளாக தனது அயல் நாடுகள் இருந்து விடக்கூடாது என்பதிலும் மிக அவதானமாக இருக்கின்றது.

**'மூன்றாம் உலகப்போர்'**

இருந்தபோதிலும் சீனா தென்னாசிய பிரந்தியத்தை மட்டுமல்ல. முழு உலகையுமே அச்சுறுத்தி கொவிட்-19 வைரஸ் மூலமாக ஒரு மூன்றாம் உலக யுத்தத்தையே தொடுத்து விட்டுள்ளதென்பதே சர்வதேச அரசியல் அவதானிகளின் கணிப்பாக இருக்கின்றது.

சீனாவின் இத்தகைய வைரஸ் மூலமான உலகை அச்சுறுத்தும் நடவடிக்கை துப்பாக்கிகளோ, பீரங்கிகளோ, விமானங்களோ, கப்பல்களோ இன்றி முழு உலகையும் உலுப்பிவிட்டுள்ளதென்பதே இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகவும் இருக்கின்றது.

கொவிட்-19 நோயின் தாக்கம் தற்போது முன்பிருந்ததை விட மேற்குலக நாடுகள் பலவற்றில் மிகவும் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் உலகை அச்சுறுத்த தொடங்கிய கொவிட்-19 வியாதி தற்போது கட்டு மீறியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

**ஜெய்சங்கரின் விஜயம்**

இந்நிலையில் முழு உலகுமே கொவிட்-19 வியாதியை எதிர்கொண்டுள்ளதையடுத்து இந்தியா தனது தடுப்பூசியை தயாரித்து பாவனைக்கு விடத்தயாராகிக்கொண்டிருக்கும் தருணத்திலேயே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

ஆகவே, கொவிட்-19 வியாதி குறித்த கரிசனையே இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் இலங்கை விஜயத்தின் போது முன்னிலை பெற்றிருந்த நிலையில், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூட தனது இராஜதந்திர நகர்வுகளை நல்ல முறையில் நகர்த்தி கொவிட்-19 வியாதியை முதன்மைப்படுத்தியநிலையில் இந்திய - இலங்கை வெளியுறவில் முக்கியத்துவம் பெற்றுள்ள இலங்கைத் தமிழர் விவகாரம் மற்றும் வடகடலில் இந்திய மீனவர் ஊடுருவல் சம்பந்தப்பட்ட பிரச்னை என்பவற்றை அணுகியுள்ளதை காணமுடிகிறது.

இருந்தபோதிலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் வடக்கு - கிழக்கு தமிழர் பிரச்னைக்கான ஒரு தீர்வாக 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இலங்கை 13ஆவது திருத்தச்சட்டத்தை முழு அளவில் அமுலாக்க வேண்டுமென்பதே இந்தியாவின் எதிர்பார்பாக இருக்கின்றது.

இந்த எதிர்பார்ப்பை தனக்கு முன்பிருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் வெளியிட்டது போலவே எஸ் ஜெய்சங்கரும் வெளியிட்டுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

**இரா.சம்பந்தன் - மஹிந்த ராஜபக்ஷ**


13ஆவது திருத்தச்சட்டம் 1987ஆம் ஆண்டு இலங்கை அரசமைப்பில் சேர்க்கப்பட்ட காலகட்டத்தில் இருந்த அரசியல்வாதிகளில் தமிழ்தேசியகூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷவுமே இன்றுவரை பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை -இந்திய அரசியல் தலைவர்களால் மாத்திரமல்ல. மிக அனுபவமிக்க இரு நாடுகளின் இராஜதந்திரிகளினதும் கலந்தாலோசனைகளின் அடிப்படையிலேயே கொண்டுவரப்பட்டிருந்தது.

இதன்காரணமாகவே தற்போதைய பிரதம மந்திரியாக இருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி

(02 ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# கொழும்பு துறைமுகத்தில் ஓர் அங்குலம்கூட வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படா

## சபையில் பிரதமர் மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, ஜன. 07

**கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை முழுமையாகவோ அல்லது பகுதி அளவில்கூட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்க எமது அரசு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது: -

கொழும்புத் துறைமுகம் எமக்கு மிக முக்கிய கேந்திர நிலையமாகும். எனினும், கடந்த நல்லாட்சி அரசில் கொழும்பு கிழக்கு முனைய அபிவிருத்தி குறித்து 2017ஆம் ஆண்டில் இந்தியாவுடனும், 2019 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் இரண்டு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன. அதன் பின்னர் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தது.

எவ்வாறு இருப்பினும் கொழும்பு கிழக்கு முனையத்தை முழுமையாகவோ அல்லது பகுதி அளவில் கூட சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்க எமது அரசு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

கடந்த 2005 - 2015 வரையான ஆட்சிக் காலத்தில் கொழும்பு தெற்கு முனையத்தின் அபிவிருத்தியை முன்னெடுத்தோம்.

அரச - தனியார் முறைமையின் கீழ் 35 ஆண்டுகால ஒப்பந்தம் செய்யப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதேபோல் கொழும்பு கிழக்கு முனைய அபிவிருத்தியையும், கொழும்பு தெற்கு முனைய அபிவிருத்தியையும் தற்போது எமது ஆட்சியில் முன்னெடுத்து வருகின்றோம்-என்றார்.




# இலங்கைக்கு எதிராகப் புதிய ஆவணம் ஐ.நாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை

## சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 07

மியன்மாரில் இடம்பெற்றமை போன்று இலங்கையிலும் இனப்படுகொலை இடம்பெற்றதாகத் தகவல்கள் திரட்டப்பட்ட ஆவணமொன்றை ஐ.நாவுக்கு அனுப்புவதற்காக அனைத்துத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரை நோக்கி மூன்று கோரிக்கைகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள்பேரவையின் உறுப்பு நாடுகளை நோக்கி ஒரு கோரிக்கை என்று நான்கு கோரிக்கைகளை மையப்படுத்திய ஆவணமொன்றை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இறுதி செய்துள்ளது.

இதில் நான் உட்பட கூட்டணியின், பங்காளிக்கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பொதுச்செயலாளர் அனந்தி சசிதரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளோம்.

இந்நிலையில் இந்தக் கோரிக்கை ஆவணம், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள், சில புலம்பெயர் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தத் தரப்பினர் இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு கையொப்பமிடும் இடத்து விரைவில் ஐ.நா.செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டரெஸ், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலட் மற்றும் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது-என்றார்.

# தனிமைப்படுத்தலுக்கு அறவிட்ட கட்டணங்கள் குறித்து விசாரணை



கொழும்பு, ஜன. 07

கடந்த காலத்தில் சில ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக அறவிடப்பட்ட கட்டணங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் இருந்து நாடு திரும்புபவர்கள் அதிக கட்டணங்களுடன் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுவதை நிறுத்தி அனைவரையும் இலவசமாகத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

எனவே ஹோட்டல்களில் தனிமைப்படுத்தலுக்காக மக்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுவது குறித்து விசாரிக்கவேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் நாமல் வலியுறுத்தியுள்ளார்.

# தபால் நிலைய அதிகாரிக்கு கொரோனா

கொழும்பு,ஜன.07

கொழும்பு மத்திய தபால் பரி மாற்ற நிலையத்தில் அமைந்துள்ள தபால் அலுவலகத்தை தற்காலிகமாக மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதிகாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# சிகிச்சை மையத்திலிருந்து தப்பிய தொற்றாளர் கைது

கொழும்பு, ஜன. 07

பொலநறுவையில் கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற நோயாளர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆரச்சிக்கட்டு , ஆணைவிழுந்தான் பகுதியில் வைத்து 52 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தலைமறைவாக இருப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கல்லேல்ல கொரோனா சிகிச்சை நிலையத்திலிருந்து ஐவர் அண்மையில் தப்பிச்சென்ற நிலையில் அவர்களில் ஒருவர் மாதம்பை பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

தப்பிச் சென்ற ஏனைய மூவரை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என அஜித் ரோஹண கூறினார்.

# மாகாண சபை தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது

## கூறுகிறார் சரித ஹேரத்



கொழும்பு, ஜன. 07

மாகாணசபை தேர்தல் குறித்து கருத்துரைப்பதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்களுக்கு தார்மீக உரிமை கிடையாது. ஐக்கிய தேசிய கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினரும் கடந்த அரசாங்கத்தில் மக்களின் ஜனநாயக உரிமையைக் கூட விட்டுவைக்கவில்லை. மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்துவது சாத்தியமற்றது என கோப் குழுவின் தலைவர் சரித ஹேரத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

மாகாண சபை தேர்தல் குறித்து எதிர்க்கட்சியினர் குறிப்பிடும் கருத்துக்கள் அவர்களின் குறைகளை மறைத்துக் கொள்ளும் வகையில் உள்ளன. மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமைக்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

மாகாண சபை தேர்தல் முறைமையினை நீக்கி புதிய தேர்தல் முறைமையை கடந்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அப்போதைய அரசாங்கம் தோல்வியடைந்ததால் மாகாண சபைத் தேர்தலை நடத்த எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. எல்லை நிர்ணய அறிக்கையை கொண்டு வந்து அதனை மூன்றில்இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கம் தோற்கடித்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலையை ஏற்படுத்தி தேர்தலை காலவரையறையின்றி பிற்போட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு மாத்திரமல்ல மக்களின் ஜனநாயக உரிமையையும் பலவீனப்படுத்தியுள்ளது. -என்றார்.

# இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பொய் என்பதை ஐ.நாவில் நிரூபிப்போம்

## சபையில் கூறினார் அமைச்சர் சரத் வீரசேகர



கொழும்பு,ஜன.07

**இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை மார்ச் மாத மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை நிரூபிக்கும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கருத்து தெரிவித்த அவர், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் 8 தீர்மானங்களை, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொண்டுவந்திருந்தார்.

அவ்வாறே 30/1 என்ற தீர்மானத்துக்கும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரனை வழங்கியது.

இவ்வாறு இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவைப் பலவீனப்படுத்தும் செயல்பாடுகளையே கடந்த அரசாங்கம் மேற்கொண்டது.

இந்த நிலையில்இவை அனைத்தும் ஆதாரமற்றக் குற்றச்சாட்டு என்பதை நாம்இம்முறை ஜெனிவா அமர்வில் நிரூபிப்போம்-என்றார்.



# மன்னாரில் 200 பேரிடம் பி.சி.ஆர்.

மன்னார், ஜன. 07

மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் மக்களிடம் எழுந்தமானமாக பி.சி.ஆர்.பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் வைத்து பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள், உணவகம், வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்கள், ஓட்டோ சாரதிகள், பயணிகள் என பல தரப்பட்டவர்களிடம் எழுந்தமானமாக பி.சி.ஆர்.பரிசோனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன், மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ் ஞானப்பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதாகரன், மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி றோய் பீரிஸ், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டனர்.

# ஒன்றரை கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கொடிகாமத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 07

கொடிகாமம் பகுதியில் ஒன்றரைக் கிலோ கஞ்சாவுடன் ஒருவர் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம் ரயில் நிலையப் பகுதியில் வைத்து பெருமளவு கஞ்சா கைமாற்றப்படுவதாக யாழ். விசேட குற்றத்தடுப்பு பிரிவுக்கு கிடைக் கப்பெற்ற தகவலின்படி அந்த நபரை கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் அந்த நபர் ரயில் நிலையப் பகுதிக்கு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்ற யாழ்.விசேட குற்றத்தடுப்பு பிரிவின் உபபொலிஸ் பொறுப்பதிகாரி மேனன் தலைமையிலான குழுவினர் அவரைக் கைது செய்தனர்.

# கொழும்பு துறைமுகத்தை வெளிநாட்டுக்கு கொடுக்க முயற்சிக்கின்றது ராஜபக்ஷ அரசு

## ஜே.வி.பி. சபையில் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 07

புதிய உடன்படிக்கை ஒன்றை நடைமுறைப்படுத்தி அதன்மூலம் கொழும்பு துறைமுகத்தை சர்வதேச நிறுவனங்களுக்குக் கொடுக்கவே ராஜபக்ஷ அரசு முயற்சித்து வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் பங்குகளில் 49 வீதம் துறைமுக அதிகார சபைக்கும், 51 வீதம் இந்திய நிறுவனத்துக்கும் கொடுக்கும் முயற்சிகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

முன்னைய அரசு, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தி என்ற பெயரில்செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைய துறைமுக அதிகார சபை இந்திய, ஜப்பான் நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் நிறுவனத்துக்குக் குறைந்த வட்டியில் ஜப்பானிடம் இருந்து கடன் கிடைக்கும் எனவும் கூறப்பட்டது.

ஆனால், தற்போது செய்து கொள்ளும் புதிய உடன்படிக்கையில் ஜப்பான் இல்லை.

இந்தநிலையில், பழைய உடன்படிக்கையை மாற்றியமைக்க முடியவில்லை எனப் பொய்களைக் கூறிக்கொண்டு புதிய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தி அதன்மூலம் கொழும்புத் துறைமுகத்தை சர்வதேச நிறுவனங்களுக்குக் கொடுக்கவே அரசு முயற்சித்து வருகின்றது- என்றார்.

# பௌத்த அறநெறி பாடசாலைகள் 17 ஆம் திகதி முதல் ஆரம்பம்

கொழும்பு,ஜன.07

கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் மூடப்பட்ட பௌத்த அறநெறிப் பாடசாலைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர நாட்டின் ஏனைய பகுதிகளில் அறிநெறிப் பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மேலும் 761 பேர் பூரணமாக குணம்

கொழும்பு,ஜன.07

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் நேற்று மேலும் 761 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 39 ஆயிரத்து 23 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 217 ஆக அதிகரித்துள்ளது. (எ)

ஈழநாடு
Eelanadu
Online
சம்பவங்கள்,
செய்திகள்
உடனுக்குடன்
அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# இராணுவ இணைப்பதிகாரிகளின் பணிகளை வரையறுக்கவேண்டும்

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 07

**கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மாவட்ட அளவில் ஒருங்கிணைக்க நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பணிகளை வரையறுக்குமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனல் பெர்னாண்டோ அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பரிந்துரைகளின் பேரில் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நிர்வகிக்க 25 மாவட்டங்களுக்கும் இராணுவ அதிகாரிகள் தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். அவர்களுக்கு டிசெம்பர் 31, 2020 அன்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின்படி சுகாதார நெறிமுறைகளை செயல்படுத்துவதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமே அதிகாரம் மிக்கவராக இருக்கவேண்டும்.

புதிதாக நியமிக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளின் தெளிவற்ற பங்கு, கொவிட் -19 இன் சுகாதார நெறிமுறைகளை அமுல்படுத்துவது தொடர்பாக மாவட்டத்தில் உள்ள கிளை தொழிற்சங்கங்களின் சுகாதார ஊழியர்களிடமும், மாகாண மட்டத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது-என்றுள்ளது.



# அடிப்படை சம்பளமாகவே 1000 ரூபா வழங்கவேண்டும்

## முற்போக்குக் கூட்டணி போராட்டம்

ஹற்றன், ஜன. 07

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி தமிழ் முற்போக்கு கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஹற்றன், மல்லியப்பு சந்தியில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம், பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சோ. ஸ்ரீதரன், இளைஞர் அணித் தலைவர் பா. சிவநேசன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா அவசியம் என கோஷம் எழுப்பட்டதுடன், தற்போதைய வாழ்க்கைச்சுமை அதிகரிப்பையும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

போராட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்த சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார், தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களுக்கமைய நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கினர்.

# யாழ்.ஆரியகுளம் பகுதியில் சைவ உணவகம் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்று பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் மூடப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பருத்தித்துறை, புலோலியைச் சேர்ந்த நபர் கடந்த 31ஆம் திகதி அந்தஉணவகத்தில் வந்து உணவருந்திச் சென்றார் எனவிசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இதேவேளை அங்கு பணியாற்றும் 11 பணியாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# அப்துல்லா மஹ்ரூப் உட்பட இருவர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜன. 07

கைது செய்யப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் உட்பட இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

2015-2019 க்கு இடையில் லங்கா சதோசவின் வாகனங்களை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இருவரும் கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த இருவரையும் பிணையில் விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# ஆயுர்வேத வைத்தியசாலைகளை கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜன. 07

ஆயுர்வேத வைத்தியசாலைகளை தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாவின்ன ஆயுர்வேத வைத்தியசாலையை கேந்திரமாகக் கொண்டு அதன் முதற்கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சுதேச வைத்திய மேம்பாடு மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

இதற்காக தாம் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம் என தெரிவித்துள்ள அவர், சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பிரிவுகளின் உதவியைப் பெற்று வேறுபட்ட சிகிச்சை அளிக்கை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் கூறினார்.

# அரசியல் கைதிகள் விடுதலைக்காக இன்று சர்வமத கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 07

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக சர்வமத கலந்துரையாடல் நிகழ்வை அரசியல் கைதிகளின் விடுதலைக்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் குரலற்றவகளின் குரல் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கட்டளை நிலைய மண்டபத்தில் இன்று மு.பகல் 10.00 மணிக்கு இந்த கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

சர்வமதத் தரப்பினரை இணைத்து மேற்கொள்ளப்படும் இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் பங்குபற்றவுள்ளனர்.

# எருக்கலம்பிட்டி கிராமம் தனிமைப்படுத்தப்பட்டது

மன்னார், ஜன. 07

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் நேற்றுக் காலை முதல் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக கடந்த திங்கட்கிழமை மன்னார் எருக்கலம்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் மாலை கிடைக்கப்பெற்றன. இவர்கள் கடந்த 26 ஆம் திகதி புத்தளத்தில் இருந்து மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இவர்களுடைய குடும்பத் தலைவர் புத்தளத்தில் இருந்து கொழும்புக்கு சென்று கடந்த 29 ஆம் திகதி மீண்டும் புத்



தளத்திற்கு வந்தபோது கொச்சிக்கடைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது அவர் தொற்று உள்ளவர் என அடையாளம் காணப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து இவரது குடும்ப உறுப்பினர்கள் மன்னார் எருக்கலம்பிட்டியில் உள்ள அவர்களின் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அந்தக் குடும்பத்தலைவரின் மகள், மூன்று மகன்கள்,மகளின் கணவர் ஆகிய 5 பேருக்கும் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. குடும்பத்தலைவரின் மனைவிக்கு தொற்று உறுதி செய்யப்படவில்லை.

இவர்கள் 26 ஆம் திகதி மன்னார் எருக்கலம்பிட்டி கிரமத்திற்கு வந்து 27 ஆம் திகதி திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டிருந்தமையால் அந்த திருமண வீட்டுக்கு சென்றவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை முடிவடையும்வரை மன்னார் எருக்கலம்பிட்டி கிராமம் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.





# கரும்புலி சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 07

மாத்தளை - ஓவல பிரதேசத்தில் சிறு மின் நிலையத்தின் நீர்த் தேக்கத்தில் சடலமாக மீட்கப்பட்ட கரும்புலியொன்று நஞ்சூட்டல் காரணமாக இறந்துள்ளதாக மரணப் பரிசோதனை களிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மின்நிலையத்தின் ஊழி யர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறந்த புலியின் பற்களை பிடுங்கிய குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இதற்கு முன்னும் கைது செய்யப்பட்டு பலத்த நிபந்தனைகளின் பேரில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

மாத்தளை மாவட்டத்தினுள் நிகழ்ந்த இரண்டாவது கரும்புலி மரணமாக இது பதிவாகியுள்ளது.

# கொரோனா சிகிச்சை மையமாக கொக்கலை ஹோட்டல் மாற்றம்

கொழும்பு, ஜன 07

கொக்கலையில் அமைந்துள்ள லோன்ங்பீசீஹோட்டல்கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக் கும் வைத்தியசாலையாக மாற் றப்பட்டுள்ளது.



அங்கு இன்று வியாழக்கிழமை முதல் சிகிச்சைகள் ஆரம்பிக் கப்படவுள்ள நிலையில், அதன் நடவடிக்கைள் இராணுவத்தி னரின் கீழ் இடம்பெறும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, கொரோனா தொற் றாளர்களுக்கு பணம் செலுத்தி அங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித் தார்.

# 248 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜன. 07

கடந்த 24 மணித்தியாலங்களில் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 248 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

டுபாயிலிருந்து 114 பேர், டோஹாவிலிருந்து 57 பேர் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

18 விமான சேவைகள் மூலம் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப் பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேலும் 513 இலங்கையர்கள் 19 விமான சேவைகள் மூலம் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனத்தெரிவிக்கப் படுகின்றது.

# ஜனாஸாக்களைப் புதைப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் அரசு



கொழும்பு, ஜன. 07

**கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் நபர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு அரசு அனுமதியளிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங் களைப் புதைப்பதால் எந்தப் பிரச்னையும் இல்லை என்பதை உலக சுகாதார நிறுவனம் கூட கூறியிருக் கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை மக்களின் மனங்களையும், உணர்வு களையும் காயப்படுத்திவிட்டு நாட்டைக் கட்டி யெழுப்ப முடியாது என்றும் மைத்திரிபால மேலும் தெரிவித்துள்ளார்.

## மேல்நீதிமன்ற நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 07

வருட இறுதி விடுமுறையின் பின்னர் மேல் நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமாகின.

சுகாதார பாதுகாப்பு விதி முறைகளை கடைப்பிடித்து நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெறும் என அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதாக மேல் நீதிமன்றத் தகவல்கள் தெரிவித்தன. வழக்கு விசாரணையின் போது, அவசிய மான நபர்கள் மற்றும் அதிகாரி களை மட்டும் நீதிமன்றுக்குள் அனுமதிக்கவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக மஞ்சள் கடத்திய இருவர் கைது!

கொழும்பு, ஜன. 07

சட்டவிரோதமான முறை யில் நாட்டினுள் கடத்தப்பட்ட மஞ்சள் பொதியுடன் இருவர் மோதறைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 1128 கிலோ கிராம் மஞ்சள் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மஞ் சளை கடத்துவதற்காக பயன் படுத்தப்பட்டதாக தெரிவிக் கப்படும் பாரவூர்தியொன் றையும் பொலிஸார்கைப்பற்றி யுள்ளனர் .

# முகக்கவசம் அணியாத ஆயிரத்து 60 பேர் கைது

கொழும்பு, ஜன. 07

முகக் கவசம் அணியாத 1060 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாடு முழுவதும் முகக் கவசம் அணியாத நபர்களை அடையாளம் காண மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதாகினர். இவர்களில், 550 பேருக்கு மேற்கொண்ட அன்ரிஜென் பரிசோதனை களில்14 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

அத்துடன் மேலும் 510 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டஔ. அதன் அறிக்கைகள் கிடைக்கப் பெறவுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு

கொழும்பு, ஜன. 07

நாட்டின் சில பகுதிகளில் நில வும் சீரற்ற காலநிலை தொடர்ந் தும் நீடிக்கும் என வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி ஊவா மாகாணத்தி லும் அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக திணைக்களம் கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங் களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத் தியம் காணப்படுகின்றது.

அத்தோடு சில இடங்களில் 75 மி.மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின் றது.




# வவுனியாவில் முக்கிய பகுதிகள் நேற்றுக் காலை திடீர் முடக்கம்!

வவுனியா, ஜன. 07

வவுனியா பஜார் வீதியின் ஒரு பகுதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதிகள் ஆகியன இராணுவம் மற்றும் பொலிஸாரால் நேற்றுக் காலை முற்றாக முடக்கப்பட் டன.

வவுனியா பட்டாணிச்சூரை சேர்ந்த இருவருக்கு கடந்த திங்கள்கிழமை கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப் பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த திங்கள் கிழமையில் இருந்து பட்டாணி சூர் பகுதி பொலிஸாரால் தற்காலி கமாக முடக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் முதற்கட் டமாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் ஐவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து பட்டாணி சூர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் குவிக் கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

இதேவேளை, பட்டாணிசூர் பகுதியைச் சேர்ந்த பலர் வவு னியா பஸார் வீதி மற்றும் நகரில் உள்ள அநேகமான வியாபார நிலை யங்களை நடத்தி வருவதுடன் ஊழியர்களாகவும் பணியாற்றி வருகின்றனர்

அதனை கருத்தில் கொண்டு நேற்றுக் காலை வவுனியா பஜார் வீதியின் ஒருபகுதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் முற்றாக முடக்கப்பட்டுள்ளதுடன், அங் குள்ள வியாபார நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு சுகா தாரப் பிரிவினரால் முதற்கட்ட மாக பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.



# 95 ஆவது ஆண்டில் இலங்கை வானொலி: ஒரு குறிப்பு

# தெற்காசிய வானலையின் ‘அரசி’

- மாலி -

இங்கிலாந்தில், பிபிஸி ஆரம்பிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளில், ஆசிய பிராந்தியத்தின் முதல் வானொலியாக இலங்கை வானொலி 1922ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முதலாம் உலக யுத்தத்தின்போது ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றிலிருந்து பெறப்பட்ட transmeter உதிரி பாகங்களை மீள் இணைத்து, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், அப்போது இலங்கையில் தந்தி சேவையின் தலைமைப் பொறியியலாளராகவிருந்த Edward Harper என்பவரும், அவரோடு அங்கு பொறியியலாளராகவிருந்த நடராஜா என்பவரும் மேற்கொண்ட பரீட்சார்த்த முயற்சி அளித்த வெற்றியில் 1925ஆம் ஆண்டு டிசம்பர்16ஆம் தேதி ‘கொழும்பு வானொலி’ உதயமானது. 1kw வலுகொண்ட, மத்திய அலை வரிசையில் அது ஒலிபரப்பை மேற்கொண்டது.

அந்தவேளையில், இலங்கை அமைந்த கேந்திர முக்கியத்துவம், இரண்டாம் உலக யுத்தத்தின் போது, தெற்காசிய பிராந்தியம் முழுவதிலுமுள்ள நேசநாட்டு படைகளுக்கான ஒலிபரப்புக்கு மிக உகந்த வானொலியாக கொழும்பு வானொலியைத் தேர்ந்தெடுக்கவைத்தது. அப்படி, தெற்காசிய படைகளுக்கான ஒலிபரப்புக்காக கொழும்பு வானொலி தென்கிழக்காசிய படைப்பிரிவினால் பொறுப்பேற்கப்பட்டு, பின்னர் மீண்டும் அது கையளிக்கப்பட்டபோது, மேலும் நன்கு நவீன மயப்படுத்தப்பட்ட ஒரு பாக்கியத்தை அந்த வானொலி பெற்றது.

அதன் பின்னர் 1949இல் அது ‘இலங்கை வானொலி‘ என்ற பெயரைப் பெற்றது. அப்போது இந்தியாவில், அகில இந்திய வானொலி - ஆகாஷ்வாணி, 1930இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக, 1923இல் பம்பாயில் Radio Club என்ற ஒன்று, வானொலி ஒலிபரப்பை இந்தியாவில் முதன்முதலாக ஆரம்பித்திருந்தது. அதன்பின்னர், India Broad casting Com pany என்ற ஒரு நிறுவனமும் 1927இல் பம்பாயி லும் கல்கத்தாவிலும் ஒலிபரப்பைத் தொடங் கியது.

அரசின் தந்தி திணைக்களத்தின் நிர்வாகத்தில், இலங்கையில் ‘கொழும்பு வானொலி’ 1925இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோது, இந்தியாவில் Indian State Broadcastinng Service 1930 ஏப்ரல் முதலாம் தேதி ஆரம்பமானது. 1936இல் இது ‘அகில இந்திய வானொலி’யாக பின்னர் மறுபெயர் சூட்டப்பட்டது.

தெற்கு ஆசிய பிராந்தியத்தில் எழுந்த இப்புதிய தொடர்பு சாதன வடிவில், தெற்கு ஆசிய வான லையின் ‘அரசி’ என்ற கீர்த்தியோடு, இலங்கை வானொலி ஒலிபரப்புக் கலைக்கான செம்மையான ஓர் இலக்கண நெறியை வகுத்து, ஒலிபரப்புத் துறையை வளப்படுத்தியது. ஒலிபரப்புக்கு இலங்கை வானொலி ஒரு ‘மாதிரி’ (Model) என்பதில் எந்த மாற்று கருத்தும் இருக்கவில்லை.

இலங்கை வானொலியில் முதல் தமிழ் நிகழ்ச்சி தயாரிப்பாளராக நியமனம்பெற்ற சோ. சிவபாத சுந்தரம்தான் தமிழ் ஒலிபரப்பின் பிதாமகர். ‘ஒலிபரப்புக் கலை’ என்ற நூலை அவர் எழுதினார். 1955இல் அது வெளிந்தபோது ‘இந்திய மொழிகள் அனைத்துள்ளும் ஒலிபரப்பு பற்றி வெளியான முதல் நூல் என்று ‘இந்து’ அந்நூல்பற்றி குறிப்பிட்டது. ஒலிபரப்புக்கான ‘பைபிள்’ அவர் எழுதிய ஒலிபரப்புக் கலை.

சிவபாதசுந்தரத்தினுடைய இந்த நூல் அமுத நிலையம் வெளியீடாக வெளிவந்தது. ஒவ்வோ ராண்டிலும் வெளியான சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம், 1955 இல்வெளியான சிறந்த நூலாக இந் நூலைத் தேர்ந்தது.

அப்போது, அங்கு அதில் ஒரு சர்ச்சை எழுந்தது. நூலை எழுதிய சிவபாதசுந்தரம் இந்தியரல்லர். இந்திய எழுத்தாளர்கள் எழுதிய நூல்களுக்கே தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்து, கௌரவித்து ஊக்குவிப்பதென்பதுதான் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினுடைய அமைப்பு விதி.

> **இலங்கை வானொலியினுடைய வர்த்தக சேவை 1950 செப்ரெம்பர் 30இல் ஆரம்பமானது. வானொலியின் ஒரு பெரும் அதிர்வை இதுதான் இந்திய துணைக்கண்டத்தில் ஏற்படுத்தியது அது, இமயம்வரை சென்றது. இமயத்தின் உச்சியில் கால்பதித்த ஹிலறியும் ரென்சிங்கும், இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பைத்தான் அங்கு வானலைகளில் முதலில் கேட்டார்கள்.**

செயலாளராகவிருந்த பெரியசாமி தூரன், எந்த நாட்டவராகவிருந்தாலும் தமிழ் நூல் என்றால் அதற்கு அப் பரிசு வழங்கப்படாலம் என்று, அதுவரை தொடர்ந்த வழக்கத்தை மாற்றியதில், ஆயிரம் ரூபா பரிசு சிவபாதசுந்தரம் அவர்களுக்கு அந் நூலுக்காக வழங்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இப் பரிசளிப்பு வைபவத்தில் நூலை அறிமுகம் செய்துவைத்துப் பேசிய பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டதாரிகளுக்கு இந் நூலைத் தாம் சிபாரிசுசெய்திருப்பதாக தெரிவித்தார்.

இப்படி, இலங்கை வானொலியின் ஆரம்ப நாள்களில் அங்கு பணியாற்றிய சோ. சிவபாதசுந்தரம், எஸ். குஞ்சிதபாதம், வி. என். பாலசுப்பிரமணியம், கே. எஸ். நடராஜா, ‘சானா’ சண்முகநாதன், ‘வானொலி மாமா’ என்று பெயர்பெற்ற எஸ். சரவணமுத்து, மோனி எலியாஸ், செந்திமணி மயில்வாகனன், ஏ.கபூர் போன்ற இவர்கள்தான் இலங்கை வானொலியின் உன்னதமான இலக்கண மரபுக்கு வரப்பிட்டவர்கள். இவர்கள் தவிர, பிபிஸியிலிருந்து இலங்கை வானொலிக்கு Director General ஆக நியமிக்கப்பட்ட John Lampson, Pascoe Thornton ( Director of programmes) ஆகியயோரின் பங்கும் உண்டு.

இலங்கை வானொலியினுடைய வர்த்தக சேவை 1950 செப்ரெம்பர் 30இல் ஆரம்பமானது. வானொலியின் ஒரு பெரும் அதிர்வை இதுதான் இந்திய துணைக்கண்டத்தில் ஏற்படுத்தியது அது, இமயம்வரை சென்றது. இமயத்தின் உச்சியில் கால்பதித்த ஹிலறி யும் ரென்சிங்கும், இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பைத்தான் அங்கு வானலைகளில் முதலில் கேட்டார்கள்.

Clifford Dodd என்ற அவுஸ்திரேலியர் இயக்குநராக நியமிக்கப்பட்டு, இலங்கை வானொலியின் இந்த வர்த்தக சேவை ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் சக்திவாய்ந்த சாதனங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சேவை, சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் மாத்திரமன்றி, அதன் ஆசிய சேவை, ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலும் விரிவடைந்து, துணைக் கண்டத்தை ஆக்கிரமித்தது.

புதியதான இந்த வர்த்தக ஒலிபரப்பு வடிவத்தில், ஒலிபரப்புத் துறைக்கே புதியவரான எஸ். பி. மயில்வாகனன், தமிழில் அதற்கான ஒரு பரிமாணத்தை அற்புதமான விதத்தில் நிர்ணயித்தார்.

இலங்கை வானொலியின் இந்த வர்த்தக சேவை ஆரம்பமான காலகட்டம், தமிழ் சினிமாவிலும் ஒரு திருப்புமுனைக் காலமாக இருந்தது. சிவாஜி, எம். ஜி. ஆர். ஆகியோர் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்த காலம் அது.

புது வளர்ச்சிபெற்ற தமிழ்த் திரைப் படத்தின் கிராமப்புற கவர்ச்சிக்கும் நகர்ப் புற கவர்ச்சிக்கும் உதவ, அப்போது அதற்கு இன்னொரு தொடர்பு சாதனத்தின் உதவி பெரிதும் தேவைப்பட்டது. கர்நாடக சங்கீதமும், செய்தியும், பேச்சுக்களும் என்றிருந்த வானொலி ஒலிபரப்பு வழக்கில் தொடங்கப்பட்ட புதிய வர்த்தக சேவைக்கு, அதன் பரவலுக்கு, தமிழ் சினிமா பாடல்கள் பெருவாய்ப்பாகின.

அகில இந்திய வானொலியில் சினிமா பாடல்கள் ஒலிபரப்புக்கு இந்திய அரசு விதித்திருந்த தடை இதற்கு மேலும் வாய்ப்பாகியது. தகவல் ஒலிபரப்பு அமைச்சராகவிருந்த B K Kesakar, 1952இல் இத் தடையை விதித்தார்.

ஆக, சினிமா, ஒலிபரப்பு ஆகிய இந்த இரு தொடர்புசாதனங்களினதும் முதல் இணைப்பு, மயில்வா கனன் என்ற அறிவிப்பாளரின் ஆளுமை வழியாகவே ஏற்பட்டதென்பார் பேராசிரியர் கா. சிவத்தம்பி. வர்த்தக ஒலிபரப்பின் நியமங்கள் பல, ‘மயில்வாகனன் யுகம்’ வழியாகவே வருகின்றன.

இந்த மயில்வாகனன் யுகம்தான் தமிழ் சினிமாவின் பொற்காலமுமாகிறது.

Transister Radioக்களும் அறிமுகமாக ஆரம்பித்த அக்காலத்தில், இந்தியாவின் கிராமப்புறங்களிலெல்லாம் ‘சிலோன் ரேடியோ இதில் கேட்குமா?’ என்பதை உறுதிப்படுத்தியே அவர்கள் அந்த ரேடியோக்களை வாங்கினார்கள். இலங்கை வானொலியைக் கேட்காமல் இந்திய நேயர் ஒருவருடைய நாள் அப்போது கழிவதில்லை.

பாடல்களின் இசைத்தட்டுக்களை வைத்துக்கொண்டு, அவற்றில் மயில்வாகனன் காண்பித்த சுழற்றல் வேலைகளும் அவரின் தனித்த, கணீரென்ற அந்தக் குரலின் ஜொலிப்பும் இந்திய இல்லங்களில் அவருக்கோர் உறவை ஏற்படுத்தின. ‘இலங்கை வானொலி என்றால் மயில்வாகனன் மயில்வாகனன் என்றால் இலங்கை வானொலி’ இப்படித்தான் அறியப்பட்டது.

திருமதி ஞானம் இரத்தினம், இலங்கை வானொலியிலே நீண்டகாலம் அதன் கல்விச் சேவையில் பணியாற்றி, பின்னர் தமிழ் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகவும், தமிழ் சேவையின் உதவிப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர்.



இலங்கை வானொலி நிலையம் முன்பு அறிவிப்பாளர்கள் அப்துல்ஹமீது - ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோருடன் ராமகிருஷ்ணன் குழுவினர்

Green Light என்று, அவர் தன்னுடைய வானொலி அநுபவங்களை - அக்காலத்து நினைவுகளை, நூலாக வெளியிட்டிருக்கிறார்.

1957ஆம் ஆண்டு இந்தியா சென்றபோது, அகில இந்திய வானொலியின் சென்னை நிலையத்துக்கு அவர் சென்றதை அந்த நூலிலே அவர் குறிப்பிடுகிறார்.

‘சாஸ்திரீய சங்கீதத்தின் உன்னதம் வாய்ந்த மரபை ஆர்வத்தோடு ரசிக்கவைக்கும் விதத்தில் பொதுமக்களின் ரசனையை மேம்படுத்த நாம் கடினமாகப் போராடிக் கொண்டிருக்கையில், இலங்கை வானொலி மலினமான இசையில், இளைய தலைமுறையைச் சீரழித்துக்கொண்டிருக்கிறது’ என்று, சென்னை வானொலி நிலையத்தின் இயக்குநர், தன்னை அவருக்கு அறிமுகப் படுத்திய அந்த மாத்திரத்தேயே, மிகுந்த கோபத்தோடு தன்னிடம் கூறியதாக அவர் அந்த நூலிலே குறிப்பிடுகிறார்.

50 - 60 களிலும், அதற்குப் பின்னரும் கூட வெகுகாலம்வரை, இலங்கை வானொலியினுடைய வர்த்தக சேவை தொடர்பில் இந்த ஓர் எண்ணம் அகில இந்திய வானொலி அதிகாரிகளிடம் மாத்திரமல்ல, கணிசமான ஒரு மக்கள் மட்டத்தில், ஒரு மக்கள் கருத்தாகவுமிருந்தது. இந்த எண்ணம் இலங்கையிலுங்கூட மிகப் பரவலாக இருந்தது.

ஆனால், இலங்கை வானொலி எதைத் தெரிந்து, எதற்காக செய்ததோ, இன்று, கர்நாடக இசை யைப்போல, தாம் பெற்ற ஓர் அரும் செல்வம் ‘தமிழ்த் திரை இசை’ என்று, தமிழ்உலகம்பெருமை யோடு கொண்டாட, அந்தச் செழிப்புக்கு வளம் சேர்த்த தனிப் பெருமை இலங்கை வானொலிக்கே உரியது.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நிலைமைகளிலும், தொடர்புசாதனங்களில் எற்பட்ட உலக ளாவிய மாற்றங்களிலும் இலங்கை வானொலி அது செலுத்திய ஆட்சியை இப்பொழுது இழந்தே விட்டது. ஆனாலும், உலகில் எந்த வானொலி நிலையத்திலுமே இல்லாத அளவில், ஒரு லட்சத்துக்கும் அதிகமான சிங்கள, தமிழ், ஆங்கில பாடல்களின் இசைத்தட்டுக்களை இலங்கை வானொலி பொக்கிஷமாகக் கொண்டுள்ளது.

1920-30களில் வெளியான, மிகவும் அரிதான 78 rpm இசைத்தட்டுக்கள் உள்ளிட்ட, அசலான தேட்டங்கள் இவை.

1967 ஜனவரி 5இல் இலங்கை வானொலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமாக மாற்றம்பெற்றது.

# கொரோனா, எபோலாவை விட ஆபத்தான எக்ஸ் வைரஸ்!

**ஆபிரிக்காவின் காடுகளில் இருந்து எக்ஸ் நோய் என்ற புதிய தொற்று பரவத் தொடங்கி உள்ளது. இந்த வைரஸ் விரைவில் உலக நாடுகளுக்கு பரவும் வாய்ப்புள்ளது. எனவே, இனிவரும் நாட்களில் பல வீரியம் மிகுந்த புதிய வைரஸ்கள் தோன்றக் கூடும். இவை மனிதகுலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும். புதிய நோய் தொற்றுக்கள் வெளிவரக்கூடிய சூழலில் நாம் தற்போது இருக்கிறோம் என மருத்துவ விஞ்ஞானி ஜீன் ஜாக்குவாஸ் டம்பாம் தெரிவித்துள்ளார்.**



கொரோனா மற்றும் எபோலா வைரஸ்களை விட ஆபத்தான வகை எக்ஸ் வைரஸ் (Disease X) உலகெங்கும் பரவி மனித குலத்தை தாக்கக் கூடும் என எபோலா வைரசை கண்டறிந்த விஞ்ஞானிகள் குழுவைச் சேர்ந்த பெல்ஜியம் மருத்துவ விஞ்ஞானி ஜீன் ஜாக்குவாஸ் டம்பாம் எச்சரித்துள்ளார்.

கொங்கோவை சேர்ந்த பெண் ஒருவருக்கு எபோலா நோய் தொற்று உள்ளதா? என பரிசோதனை செய்யப்பட்டபோது கொரோனாவை விட வேகமாக பரவும் 'எக்ஸ்' நோயினால் அவர் பாதிக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் உலகம் பெரும் பாதிப்புக்களைச் சந்தித்துவரும் நிலையில் 'எக்ஸ் நோய்' என்ற அதிபயங்கரமான புதிய நோய் விரைவில் மனித குலத்தை தாக்கக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

பெல்ஜியம் நாட்டை சேர்ந்தவர் மருத்துவ விஞ்ஞானி ஜீன் ஜாக்குவாஸ்டம்பாம். கடந்த 1976ஆம் ஆண்டு எபோலா வைரசை கண்டறிந்த விஞ்ஞானி பீற்றர் பயட்டுக்கு உதவியாக இருந்தவர். இந்த நிலையில் அவர் வெளியிட்டுள்ள இந்த எச்சரிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் மஞ்சள் காய்ச்சல், ரேபிஸ் மற்றும் லைம் நோய் உள்ளிட்ட தொற்றுக்கள் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவின. பின்னர் சிம்பன்சி எனப்படும் வாலில்லா ஆப்ரிக்க காட்டுக் குரங்கில் இருந்து எச்.ஐ.வி. உருவாகி, பின்னர் அது அபாயகரமான நோயாக மாறியது.

தற்போது, ஆபிரிக்காவின் காடுகளில் இருந்து எக்ஸ் நோய் என்ற புதிய தொற்று பரவத் தொடங்கி உள்ளது. இந்த வைரஸ் விரைவில் உலக நாடுகளுக்கு பரவும் வாய்ப்புள்ளது. எனவே, இனிவரும் நாட்களில் பல வீரியம் மிகுந்த புதிய வைரஸ்கள் தோன்றக் கூடும். இவை மனிதகுலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும். புதிய நோய் தொற்றுக்கள் வெளிவரக்கூடிய சூழலில் நாம் தற்போது இருக்கிறோம் என மருத்துவ விஞ்ஞானி ஜீன் ஜாக்குவாஸ் டம்பாம் தெரிவித்துள்ளார்.

உலகளவில் இதுவரை கண்டறியப்படாத புதிய வைரஸ்கள் இனங்காணப்படுமிடத்து அவற்றுக்கு எக்ஸ் எனப் பெயரிடப்படுவது வழக்கம். தொடர்ந்து அது குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபின்னர் புதிய பெயர் இடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் புதிய எக்ஸ் வைரஸ் ஒரு சர்வதேச தொற்று நோயாக மாறும் சாத்தியம் உள்ளது. முக்கியத்துவம் அளிக்கக் கூடிய நோய்களின் பட்டியலில் இந்த புதிய நோயும் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும் என உலக சுகாதார நிறுவனத்தின் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். ■

# கொரோனா வைரஸ் தோற்றம் குறித்த ஆய்வுக்கு அனுமதிக்காமல் தொடர்ந்து இழுத்தடிக்கும் சீனா!

கொரோனா வைரஸ் தொற்று நோயின் தோற்றம் குறித்து ஆராய்வதற்காக வல்லுநர்கள் குழுவை சீனாவுக்கு அனுப்பும் திட்டத்துக்கு அனுமதி வழங்காமல் சீன அரசு இழுத்தடித்து வருவது குறித்து உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

விசாரணைகளுக்காக சீனா செல்ல சர்வதேச அறிவியல் குழுவின் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர். எனினும் அவர்களுக்கான அனுமதியை சீனா இன்னமும் வழங்கவில்லை என ஜெனிவாவில் செய்தியாளர்களிடம் பேசிய கெப்ரேயஸ் குறிப்பிட்டார்.

சீனாவின் இந்த இழுத்தடிப்பால் நான் மிகவும் ஏமாற்றமடைகிறேன் எனவும் அவர் கூறினார்.

சீனாவில் கொரோனா வைரஸ் தோற்றம் குறித்து ஆராய்ந்து அறிவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம் எனவும் கெப்ரேயஸ் குறிப்பிட்டார்.

சீனாவில் குறிப்பாக வூஹான் நகரில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வுக்காக செல்வதற்கு சர்வதேச நாடுகள் பலவற்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வல்லுநர்கள் தயாராக உள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வல்லுநர்கள் குழுவின் சீன பயணத்துக்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் விசா அனுமதி உட்பட தேவையான ஒப்புதல்கள் வழங்கமால் சீனா இழுத்தடித்து வருகிறது.

ஏற்கனவே, சீனாவின் வுஹான் நகரில் தோன்றிய கொரோனா வைரஸ் உலகம் முழுதும் பரவ சீனாவின் பொறுப்பற்ற போக்கே காரணம் என அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

சீனா தொற்று நோய் தொடர்பான தகவல்களை தொடர்ந்தும் மறைத்து வருவதாகவும் இந்த நாடுகள் விசனம் வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள உலக சுகாதார அமைப்பின் சர்வதேச வல்லுநர் குழுக்களுக்கும் அனுமதி வழங்காமல் சீனா தொடர்ந்து இழுத்தடித்து வருவது அந்நாட்டின்



மீதான விமர்சனங்கள் அதிகரிக்க ஏதுவான மற்றொரு காரணியாக மாறியுள்ளது. ■



# ‘நல்லூரான் செம்மணி வளைவு’ பொங்கல் தினத்தன்று திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.07

நல்லூர்க் கந்தப்பெருமானின் அடியவர்களின் வேண்டுகளுக்கு அமைய நல்லூர் முருகன் தண்ணீர் பந்தல் சபையினரின் முயற்சியால் யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் புதிதாக பிரமாண்டமாக நிர்மாணிக்கப்பட்ட ‘நல்லூரான் செம்மணி வளைவு’ எதிர்வரும் 14ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று நண்பகல் 12 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் புனித வாழ்க்கை நெறியான கந்தபுராண கலாசாரத்தின் அடையாளங்கள் பல இவ் வளைவில் வனப்புற பிரதிபலிக்கும் வகை யில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வளைவு அமைக்க முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நிதியொதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுத்ததோடு, தனது சொந்த நிதி உதவிகளையும் வழங்கியிருந்தார். (எ)

# துமிந்தவுக்கு மன்னிப்பு வழங்குவது சிறந்தது



## ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு என்கிறார் எஸ்.பி. திஸாநாயக்க



கொழும்பு,ஜன.07

**மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவை விடுதலை செய்ய பல்வேறு தரப்பினர் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி உரிய கவனம் செலுத்தவேண்டும். சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. ஆகவே துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது சிறந்தது என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் கொழும்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாரத லக்ஷ்மன் கொலை வழக்கில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. துமிந்த சில்வாவுக்கு முதலில் துப்பாக்கிச் சூடுபட்டு அவர் கீழே விழுந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் இவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. துமிந்த சில்வாவின் விடுதலை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும். துமிந்த சில்வாவின் விடுதலை வரவேற்கத்தக்கது- என்றார். (எ)

# உக்ரைன் பிரஜைகள் மூலம் கொரோனா 3ஆவது அலை

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு,ஜன.07

நாட்டில் கொரோனா இரண்டாவது அலை உருவானமைக்கு உக்ரைன் பிரஜைகள் காரணமாக இருக்கலாம் என்று அரசாங்கம் கூறியது. ஆனால் தற்போதும் சுற்றுலாத்துறையை ஆரம்பித்து வைப்பதற்கு அந்நாட்டுப் பிரஜைகளே வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் உக்ரைன் பிரஜைகள் மூலம் இலங்கையில் கொரோனா மூன்றாவது அலையும் உருவாகிவிடுமா? என்ற சந்தேகம் நிலவுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மினுவாங்கொடை கொத்தணி இரண்டாம் அலையாக தீவிரமாகப் பரவியுள்ளது. இதனைத் தொடர்ந்து சிறைச்சாலைக் கொத்தணி, பொலிஸ் கொத்தணி என பல கொத்தணிகள் உருவாகின. இரண்டாம் அலைக்கு உக்ரைன் பிரஜைகள் சிலரின் வருகை காரணமாக இருக்கும் என்று அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அவ்வாறெனில், தற்போது அவர்களால் மூன்றாம் அலையும் உருவாகிவிடுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது இவ்வாறிருக்க, தற்போது உதயங்க கொத்தணியும் உருவாகியுள்ளது. இந்தக் கொத்தணியில் உக்ரைனிலிருந்து வந்த 6 சுற்றுலாப்பயணிகளுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆறு பேருக்கும் கொரோனா வைரஸின் புதிய வகை தொற்று பரவியுள்ளதா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது- என்றார். (எ)

## மனோரஞ்சனுக்கு பிணை

கொழும்பு,ஜன.07

கடந்த அரசாங்கத்தின் போது செயல்பட்ட இடம்பெயர்ந்தோரை மீளப் பதிவு செய்யும் வேலைத்திட்டத்தின் கணக்காளர் அலகரத்னம் மனோரஞ்சன், மூன்று மாத கால விளக்கமறியலின் பின்னர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபா ரொக்கப்பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணைகள் இரண்டின் அடிப்படையில் இவரை பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த பெர்னாண்டோ உத்தரவிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெயர்ந் தோரை புத்தளத்திலிருந்து சிலாவத்துறை வரை 221 இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் மூலம் அழைத்துச் சென்றார் என குற்றம் சுமத்தப்பட்டது. (எ)

## சு.க.மீது பாரிய சந்தேகம்

# “தனித்து போட்டியிட்டாலும் பெரமுன வெற்றிபெறும்”



கொழும்பு,ஜன.07

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயல்பாடுகள் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. கூட்டணியாகச் செயல்பட்டாலும் அவதானத்துடன் இருப்போம். மீண்டும் ஒக்ரோபர் அரசியல் நெருக்கடி ஏற்படுவதற்கு ஒருபோதும் வாய்ப்பில்லை. பொதுஜன பெரமுன எந்தத்தேர்தலில் தனித்து போட்டியிட்டாலும் வெற்றி பெறும் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் சுதந்திரக் கட்சி பங்காளிக் கட்சியாகவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுன அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுன என்ற கூட்டணியை உருவாக்கியது. இந்தக் கூட்டணியையும், அரசாங்கத்தையும் பலவீனப்படுத்தும் வகையில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் செயல்படுகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் சுதந்திரக் கட்சியின் மீது மீண்டும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் செயல்பாடுகள் கடந்த காலங்களில் இவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை நம்பிக்கையானவர்களே பலவீனப்படுத்தினர். 2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சியால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடந்த அரசாங்கத்தின் பலவீனத் தன்மையால் நாட்டு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினர்.

2018 ஆம் ஆண்டு ஒப்ரோபர் மாதம் நல்லாட்சி அரசாங்கத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தற்போதைய அரசாங்கத்தில் ஒருபோதும் ஏற்படாது. சுதந்திரக் கட்சியின் செயல்பாடுகளை நாம் தொடர்ந்தும் அவதானித்து வருகின்றோம். கூட்டணியாகத் தொடர்ந்து இணக்கமாகச் செயல்படுவதே எமது இலக்காகும்.

சுதந்திரக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டால் பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. எவருக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும் என்பதை நாட்டு மக்கள் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மூலம் தீர்மானித்து விட்டனர். ஆகவே, பொதுஜன பெரமுன எந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் வெற்றிபெறும்- என்றார். (எ)

# பறிமுதல் செய்யப்படும் போதைப்பொருள்கள் பொதுமக்கள் முன் அழிக்க புதிய வழிமுறை

## சபையில் கூறினார் சரத் வீரசேகர



கொழும்பு,ஜன.07

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களை பொதுமக்கள் முன்னிலையில் அழிக்க புதிய வழிமுறை வகுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாடல்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் பொதுமக்களின் பாவனைக்கு செல்லும் சூழ்நிலை உள்ளது. இதுபோன்ற சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்த இந்தப் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவதற்கு அதிக காலம் எடுக்கும். ஆகவே இது தொடர்பில் விசாரணைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

விசாரணையின் போது போதைப்பொருள் காணாமல் போனது போன்ற நடவடிக்கைகள் தற்போது கட்டுப்பாட்டிலுள்ளன.

2020 ஆம் ஆண்டில் 2,740 கிலோ கிராம் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன- என்றார். (எ)

# சர்வதேச தீர்ப்பாயத்தில் இலங்கை ஐ.நா. தீர்மானம் உதவ வேண்டும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் பரிந்துரை

கிளிநொச்சி,ஜன.07

**எந்தவொரு புதிய தீர்மானங்களும், பொறுப்புக் கூறலை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது. ஐ.நா. தீர்மானமானது இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும் என வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் பரிந்துரைத் துள்ளது.**

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பில் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்த அமைப்பின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:

இலங்கையில் வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாம் மார்ச் 2021 கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானம் தொடர்பில் எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் தாங்களாகவே முன்வந்து இணை அனுசரணை வழங்கிய தீர்மானம் உட்பட ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் எந்தவொரு தீர்மானத்தையும் அமுல்படுத்தத் தவறியுள்ளது என்பதை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

எந்தவொரு புதிய தீர்மானங்களும், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கக் கூடாது. இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேசதீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்தவே ஐ.நா. தீர்மானம் உதவ வேண்டும். இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதானது அதனை தண்டனையிலிருந்து தப்பிக்க வழிசெய்வதுடன், இலங்கை அரசின் கொடுமையான சட்டங்களாலும் தமிழர் தாயக பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவப் பிரசன்னத்தாலும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு இது வழிசமைக்கும்.

தமிழ் இனத்தவர்கள் என்ற காரணத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எனவே, நிரந்தர அரசியல் தீர்வொன்றுதான் இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானத்தை அடையவும், இந்து சமுத்திர பிராந்தியத்தில் திடமான நிலை ஒன்று அமையவும் உதவி செய்யும்- என்றார். (எ)



## 41 நாள்களின் பின்னர் நேற்று

# அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் சகல பிரதேசங்களும் விடுவிப்பு

அக்கரைப்பற்று,ஜன.07

கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி முதல் அக்கரைப்பற்று, பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை உள்ளிட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளின் சகல பிரதேசங்களும் கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் முடக்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த டிசெம்பர் 17ஆம் திகதி அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அக்கரைப்பற்று 5, 14, மற்றும் நகர்ப் பிரிவு என்பன ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அக்கரைப்பற்று 8-1, 8-3, 9 ஆகிய பிரிவுகளும் அட்டாளைச் சேனை-08 பிரதேச செயலாளர் பிரிவில் பாலமுனை-1 ஒலுவில் மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய பிரிவுகளும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த 09 பிரிவுகளைத் தவிர ஏனைய பிரிவுகள் விடுவிக்கப்பட்டன.

இவ்வாறு தொடர்ந்தும் முடக்கப்பட்டிருந்த 9 பிரிவுகளும் நேற்றுக் காலை முதல் விடுவிக்கப்பட்டுள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் இதனை ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் உறுதிப்படுத்தினார்.

எனினும், மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுமாறும் பொது மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, நேற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகி கிராமம் முதல் அக்கரைப்பற்று மத்திய சந்தைப்பகுதி வரையிலான பிரதேசங்களில் முகக்கவசம் இன்றி சுகாதார விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட பலர் மீது பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்தனர். (எ)

# பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பல சவால்கள்

கொழும்பு,ஜன.07

அரச முறை கடன் செலுத்தலில் எந்தவித தடையும் ஏற்படாது. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் நடைமுறையில் பல சவால்கள் காணப்படுகின்றன.

அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு தேசிய பொருளாதார வளர்ச்சியை 5.2 வீதத்தால் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என நிதி மற்றும் மூலதனச்சந்தை, அரச தொழில் முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித் தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பூகோள மட்டத்தில் பொருளாதாரத்துறையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் இலங்கையும் 2020ஆம் ஆண்டு பொருளாதார மட்டத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் எதிர்த்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் அரச முறை கடன்களைச் செலுத்துவதில் எந்தவிதத் தடையும் ஏற்படாது. அரசாங்கம் 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து செலுத்த வேண்டிய கடன்களை உரிய நேரத்தில் செலுத்தியுள்ளது - என்றார். (எ)



# வளர்ச்சியை தடுக்கும் ஐந்து மாபியாக்கள்

## விவசாயத்துறை அமைச்சர் கவலை

கொழும்பு,ஜன.07

விவசாயத்துறையின் வளர்ச்சியைத் தடுக்கும் வகையில் ஐந்து மாபியாக்கள் செயல்பட்டு வருகின்றன. அவை இறக்குமதி பொருளாதாரத்துக்குப் பதிலாக உற்பத்தி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நாட்டு சார்பு இயக்கத்துக்குத் தடையாக உள்ளன என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நெல், அரிசி, காய்கறிகள், விதைகள் மற்றும் உரங்கள் போன்ற பெரியளவிலான மாபியாக்கள் நாட்டின் விவசாயத்துறையின் எதிர்காலத்தை முற்றிலுமாக அழித்து வருகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பத்லேகொடைவிலுள்ள நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவசாய பயிற்றுநர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# “நாம் நான்காம் கட்ட விண்ணப்பதாரர்களே”

கொழும்பு,ஜன.07

கொரோனா வைரஸ் தொற்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் நாம் நான்காம் கட்ட விண்ணப்பதாரர்களாகவே இருக்கிறோம் என முன்னாள் சுகாதார அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன குற்றச்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உலகில் பல நாடுகள் கொரோனா தடுப்பூசியைப் பயன்படுத்துகையில், இலங்கை அரசாங்கம் இன்னும் தடுப்பூசியைத் தேர்ந்தெடுத்து வருகிறது. உறுதியான நிலைப்பாடுகள் இன்னும் இல்லை. நாட்டில் கொரோனா நிலை தொடர்ந்து ஆபத்தில் உள்ளது. இதற்கு ஏன் அறிவியல் முறைகளை அரசாங்கம் பின்பற்றவில்லை? நாங்கள் நான்காம் கட்ட விண்ணப்பதாரர்களாகத் தான் இருக்கிறோம்- என்றார். (எ)

# ‘பேஸ்புக்’கில் படம் பதிவேற்றிய நால்வர் மீது சட்ட நடவடிக்கை

## வர்த்தக நிலையத்துக்கு பூட்டு



சாய்ந்தமருது,ஜன.07

சாய்ந்தமருது பிரதேசத்தில் வர்த்தக நிலையம் ஒன்று மூடப்பட்டுள்ளதுடன் அங்கு பணியாற்றிய 04 ஊழியர்கள் தனிமைப்படுத் தப்பட்டு அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என சாய்ந்தமருது பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சாய்ந்தமருது பிரதான வீதியில் அமைந் துள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று முன்தினம் இந்த ஊழியர்கள் முகக்கவசம் அணியாமலும் சமூக இடைவெளியைப் பேணாமல் கூட்டாக நின்று படம் (செல்பி) எடுத்து அதனை முகநூலில் பதிவிட்டிருந்தனர்.

இவ்விடயம் சுகாதாரத் துறையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களது செயல்பாடு சுகாதார நடை முறைகளுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும் அரசாங்கத்தின் கொரோனா வைரஸ் தடுப்பு சட்டத்தை மீறும் வகையிலும் அமைந் திருந்தமையால் அந்தச் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தக நிலையத்தை 14 நாள்கள் மூடுவதற்கு உத்தரவிடப்பட்டிருப்பதுடன் 04 ஊழியர்களையும் தமது வீடுகளில் சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இவர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக் கப்பட்டிருப்பதுடன் கொரோனா தடுப்பு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்து, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர் மானிக்கப்பட்டு அதற்கான ஏற்பாடும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது- என்றார். (எ)



# பிரித்தானியாவில் 60,000 தொற்றுகள்

லண்டன், ஜன. 06

பிரித்தானியாவில் பொது முடக்கம் நடைமுறையி லுள்ளபோதும் தினமும் 60ஆயிரம் வைரஸ் தொற்றுக் கள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இங்கிலிஸ் வைரஸ் என்று அழைக்கப்படும் மாற்ற மடைந்த புதிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவத் தொடங்கியதில் இருந்து சில நாட்களிலில் தினசரி 50 ஆயிரம் என்றளவில் தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் அங்கு பொது முடக்கம் நடைமுறைக்கு வந்தது. இந்நிலையில் தினசரி 60ஆயிரம் புதிய வைரஸ் தொற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை மாத்திரம் 60ஆயிரத்து 961 பேர் புதிய வைரஸ் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்ட னர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஐமேக்காவின் பரப்பளவு அமேசன் காடு அழிப்பு

பிரேஸிலியா, ஜன. 07

2019 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலக்கட்டத்தில் ஜமேக்கா நாட்டின் பரப்பளவுக்கு இணையான அமேசன் மழைக் காடுகளை பிரேசில் இழந்திருக்கிறது என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து பிரேசில் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், “ ஒகஸ்ட் 2019 ஜூலை முதல் 2020 வரையான காலக்கட்டத்தில் ஜமேக்கா நாட்டின் பரப்பளவுக்கு இணையான அமேசன் மழைக்காட்டை பிரேசில் இழந்திருக்கிறது. சுமார் 11 ஆயிரத்து 88 சதுர கிலோமீற்றர் பரப்பளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இந்தக் காடழிப்பு இடம்பெற்று வருகின்றது”, என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் போல்சொனாரோ கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு நாட்டின் பொருளாதார நலனுக்காக பிரேஸிலின் மழைக்காடுகள் அழிவதை தீவிரப்படுத்தி வருகிறார். இதற்கு எதிராக பிரேஸில் பூர்வ பழங்குடிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனால், ஜெய்ர் போல்சொனரோ பெரும் விமர்ச னங்களுக்கு உள்ளானார். முன்னதாக கடந்த ஒகஸ்ட் மாதம் காட்டுத் தீ காரணமாக அமேசன் காடுகள் தீக்கு இரையாகின. அப்போது பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் தீயை அணைப்பதற்கு பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் உதவ தயார் என்று தெரிவித்திருந்தார். ஆனால், இதனை பிரேசில் அதிபர் நிராகரித்துவிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

பூமியின் நிலப்பரப்பில் வெறும் 6 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ள அமேசன் காடு, பூவுலகின் தாவ ரங்கள், உயிரின வகைகளில் பாதியைக் கொண்டுள்ளது. உலகின் நுரையீரலாக அம்சன் காடுகள் உள்ளன என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒரு தடவை மட்டும் ஊசி ஏற்றினால் தொற்று பாதுகாப்பு உறுதி இல்லை!

## பைசர் - பயோஎன்ரெக் கூட்டறிக்கை

வாஷிங்டன், ஜன. 07

பைசர் - பயோஎன்ரெக் தடுப்பூசியை முதல் முறை ஏற் றிக்கொண்ட ஒருவர் அடுத்த மூன்று வார காலப்பகுதியில்- 21நாட்களுக்குள் - இரண்டா வது ஊசியையும் பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டா யம். அப்போதுதான் அதன் நோய் எதிர்ப்பு சக்தி முழு மையாகப் பலன் அளிக்கும். அவ்வாறின்றி இரண்டாவது ஊசியை ஏற்றவேண்டிய காலத்தை மூன்று வாரங்களுக்கு மேல் இழுத்தடித் தால் முதலாவது தடுப்பூசியின் முழுமையான பலன் கிட்டாது போகலாம்.




தங்களது தடுப்பூசி இரண்டாவது முறை ஏற் றாமல் ஒரே தடவையில் மட்டும் பலனளிக்கும் என் பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்று ‘பைசர் - பயோஎன்ரெக்’ நிறுவனங்கள் விடுத்துள்ள கூட்ட றிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

‘தடுப்பூசியின் பாதுகாப்பு மற்றும் செயல்திறன் வெவ்வேறு அளவீட்டு விதிமுறைகளில் மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆரம்பத்தில் அது மனிதர்க ளில் பரிசீலிக்கப்பட்டபோது அவர்கள் இரண்டு தடவைகள் ஊசி மருந்தைப் பெற்றனர். தடுப்பூசியின் அதிகபட்ச பாதுகாப்பிற்கு அது இரண்டு முறை கொடுக்கப்பட வேண்டும். பொதுவாக, இரண்டா வது ஊசி முதல் மூன்று வாரங்களுக்குள் ஏற்றப்பட வேண்டும்.”-என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

ரொய்ட்டர் செய்தி நிறுவனம் நேற்று இத்தக வலை வெளியிட்டிருக்கிறது.

பல நாடுகளும் வைரஸ் பரவும் வேகத்துடன் போட்டா போட்டி போட்டுக்கொண்டு தடுப்பூசி போடும் திட்டங்களை வேகமாக முன்னெடுக்க முயற்சிப்பதால் ஊசி மருந்துக்குப் பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவாகி வருகி றது. தேவைக்கு ஏற்ப அவற்றை விநியோகிக்க முடியாமல் உற்பத்தி நிறுவனங்கள் ஒடிமுழிக்கின்றன.

இதனால் சில ஐரோப்பிய நாடுகள் தமது பிரஜை களுக்கு இரண்டாவது ஊசி போடவேண்டிய திக தியை தத்தமது வசதிக்கு ஏற்ப இஷ்டத்துக்கு ஒத்தி வைத்து வருகின்றன. டென்மார்க் இரண்டு தடுப்பூசி களுக்கு இடையிலான கால இடைவெளியை ஆறு வாரங்களாகவும், பிரித்தானியா 12 வாரங்களாகவும் அனுமதித்திருக்கின்றன.

ஜேர்மனியும் மிக அதிகமானோருக்கு ஒரே தட வையில் ஊசி ஏற்றும் பணிகளை வேகமாக முன்னெ டுக்க வேண்டி இருப்பதால் இரண்டாவது ஊசிக் கான கால இடைவெளியை நீடிப்பது குறித்து ஆராய்ந்து வருகிறது என்று தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை -

ஒரு நிறுவனத்தின் தடுப்பூசியை ஏற்றிய நபர் ஒரு வருக்கு மற்றொரு உற்பத்தி நிறுவனத்தின் தடுப்பூசியை இரண்டாவது முறை ஏற்றுவது குறித்து அறிவிய லாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஒருவருக்கு மாறி மாறி இருவேறு வகை ஊசிகளை ஏற்றுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்குமாறு மருத்து வர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.(ஐ)

# 41 நாடுகளுக்கு பரவியது பிரிட்டன் புதிய வைரஸ்

## உலக சுகாதா ஸ்தாபனம்

ஜெனிவா, ஜன. 07

பிரித்தானியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இங்கிலிஸ் வைரஸ் என அழைக்கப்படும் உருமாறிய புதிய கொரோனா வைரஸ் தற்போது 41 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் பரவியுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித் துள்ளது.

பிரித்தானியாவில் கண்டறியப்பட்ட VOC-202012/01 உருமாறிய புதிய கொரோனா வைரஸ் ஆறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்தியங்களில் ஐந்தில் பரவி யுள்ளது. 40 நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலான நோய்த் தொற்றுக்கள் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட 501Y.V2 உருமாறிய கொரோனா வைரஸ் ஆறு நாடு களில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி உருமாறிய புதிய கொரோனா வைரஸ் பிரித்தா னியாவில் முதன்முதலாக உறுதி செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் பரவிய கொரோனாவை விட தற்போது உருமாறியுள்ள புதிய வகை கொரோனா 70 சதவீதம் வேகமாக பரவும் என தெரியவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# 600 ஊடகவியலாளர்கள் கொரேனாவால் மரணம்

ஜெனிவா, ஜன. 07

கொரோனா தொற்றால் கடந்த 10 மாதங்களில் 600 ஊடகவியலாளர்கள் உயிரிழந்தனர் என்று ஜெனிவாவை தளமாகக் கொண்ட பத்திரிகை சின்னம் அமைப்பு தெரி வித்துள்ளது.

இதன்படி மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து 59 நாடுகளைச் சேர்ந்த 602 ஊடகவியலாளர்கள் கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்தனர்.

மாதம் ஒன்றுக்கு 60 ஊடகவியலாளர்கள் உயிரிழந் தனர். லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே அதிகளவான ஊடகவியலாளர்கள் மரணமாகினர். அங்கு 303 ஊடக வியலாளர்கள் இதுவரை உயிரிழந்தனர். நாடுகளின் அடிப்படையில் பெரு நாட்டில் 93, பிரேஸில் 55, இந் தியா 53 ஆகிய நாடுகள் முதல் இடங்களில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாடு அமைச்சர் காமராஜுக்கு தொற்று

சென்னை, ஜன. 07

தமிழ்நாடு உணவுத்துறை அமைச்சர் காமராஜ் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அமைச்சர் காமராஜ் சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

திருவாரூரில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பொங் கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியில் உணவுத் துறை அமைச்சர் காமராஜ் கலந்து கொண்டார்.

ஏற்கனவே தமிழக அமைச்சர்கள் கே.பி.அன்பழகன், துரைக்கண்ணு, செல்லூர் ராஜூ, நிலோபர் கபில், தங்கமணி என பலர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ள நிலையில் தற்போது அமைச்சர் காமராஜுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# பாரிஸிலும் புதிய வைரஸ்!

பாரிஸ், ஜன. 07

‘இங்கிலிஷ் வைரஸ்’ என்று அழைக்கப் படும் மாற் றம் அடைந்த புதிய கொரோனா வைரஸ் பாரிஸிலும் பரவி உள்ளது. பாரிஸ் மருத்துவமனைகளின் பணிப் பாளர் நாயகம் மார்ட்டின் ஹைர்ஸ்ச் இந்தத் தகவலை தெரிவித்திருக்கிறார்.

“பாரிஸ் பிராந்தியத்தில் உள்ள ஆய்வுக்கூடம் ஒன் றில் நோயாளி ஒருவருக்கு புதிய வைரஸ் கண்டறியப் பட்டது. அவர் தற்சமயம் முழுமையான கட்டுப்பாட் டில் இருக்கிறார்” என்பதை மருத்துவமனைகளின் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேசமயம் மாற்றமடைந்து பரவி வருகின்ற புதிய வைரஸ் பிரான்ஸின் பல பகுதிகளிலும் இதுவரை 15 பேருக்குத் தொற்றியிருப்பது உறுதியாகி இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

புதிய வைரஸ் தற்போது பாவனைக்கு வந்துள்ள தடுப் பூசியை எதிர்த்து நிற்கும் தன்மை கொண்டதா என்று பிரான்ஸின் சுகாதார அமைச்சர் ஒலிவர் வேரனிடம் ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் - ‘இந்தக் கட்டம் வரை அறிவியலாளர்கள் தடுப்பு மருந்துகள் மீது மாற்ற மடைந்த புதிய வைரஸ் சிறிதளவு தாக்கம் செலுத்தக் கூடும் என்று கருதுகிறார்கள். ஆயினும், நடைபெற்று வரும் ஆய்வுகள் தடுப்பூசியின் வீரியத்தன்மை மீது நம் பிக்கையை ஏற்படுத்தி உள்ளன” - என்றார். (ஐ)

# பாகிஸ்தானை வெற்றிகொண்ட நியூஸிலாந்து வரலாற்று சாதனை



கிறிஸ்ட்சேர்ச், ஜன. 07

பாகிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 176 ஓட்டங்களினால் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இதனால், ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசையில் முதல் இடத்தைப் பிடித்தது. ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் அந்த அணி முதல் இடத்தை பிடித்தமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி இருபது - 20 தொடரிலும், டெஸ்ட் தொடரிலும் பங்கேற்றது.

இருபது -20 தொடரை 2-1 என்ற கணக்கில் நியூஸிலாந்து கைப்பற்றியது. முதல் டெஸ்ட் போட்டியையும் 101 ஓட்டங்களால் வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் இரண்டாவது இரண்டாவது போட்டி கிறிஸ்ட்சர்ச் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமானது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி தனது முதல் இனிங்ஸில் 297 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. தனது முதல் இனிங்ஸில் ஆடிய நியூஸிலாந்து 6 விக்கெட்கள் இழப்புக்கு 659 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை நிறுத்தியது.

இந்த இன்னிங்ஸில் டெஸ்ட் போட்டியில் வில்லியம்சன் நான்காவது இரட்டை சதத்தை அடித்தார். இதன் மூலம் டெஸ்டில் அதிக இரட்டை சதம் (4) அடித்த நியூசிலாந்துக்காரர் என்ற பெருமையை பிரன்டன் மெக்கல்லத்துடன் இணைந்து பெற்றார்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி வீரர்கள் நியூஸிலாந்து அணியினரின் பந்து வீச்சுகளுக்க தாக்குப் பிடிக்க முடியாது 81.4 ஓவர்களை மாத்திரம் எதிர்கொண்டு 186 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தனர்.

இதனால் நியூஸிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 176 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பாகிஸ்தான் அணி சார்பில் அஸர் அலி 93 ஓட்டங்களையும், மெஹமட் றிஸ்வான் 61 ஓட்டங்களையும், பஹீம் அஷ்ரப் 48 ஓட்டங்களையும் அதிகபடியாக பெற, ஏனைய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் கெய்ல் ஜமைசன் 5 விக்கெட்களையும், ரிம் சௌதி மற்றும் டிரெண்ட் போல்ட் ஆகியோர் தலா இரு விக்கெட்களையும், மாட் ஹென்றி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நியூஸிலாந்து அணியின் இந்த வெற்றியின் மூலம் 118 புள்ளிகளுடன் ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ளது. பட்டியலில் 116 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா இரண்டாம் இடத்திலும், 114 புள்ளிகளுடன் இந்தியா மூன்றாம் இடத்திலும் உள்ளது.

இதேவேளை, அண்மைய வெற்றிகள் நியூஸிலாந்து அணியை ஐ.சி.சி., உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் நிலைக்கு தரம் உயர்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஐஸ் ஹொக்கி தொடர்:
# கனடாவை வீழ்த்தி அமெரிக்கா சம்பியன்

றொறண்டோ, ஜன. 07

2021 உலக ஜூனியர் ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க அணி கனடாவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

கனடாவின் எட்மண்டனில் அந் நாட்டு நேரப்படி செவ்வாயன்று இரவு நடந்த இறுதிப் போட்டியில் 2-0 (1-0, 1-0, 0-0) என்ற கோல் கணக்கில் கனடாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்றது அமெரிக்க அணி.

டர்கோட் அலெக்ஸ் (13 ஆவது நிமிடம்), ஜெக்ராஸ் ட்ரெவர் (20 ஆவது நிமிடம்) ஆகியோரர தலா ஒவ்வொரு கோல் அடித்தனர்.

ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில் அமெரிக்கா தங்கப் பதக்கம் வெல்வது இது ஐந்தாவது சந்தர்ப்பமாகும்.

2021 உலக ஜூனியர் ஐஸ் ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்ற கனடா வெள்ளிப் பதக்கத்தையும், ரஷய அணியை வீழ்த்தி பின்லாந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கங்குலி இன்று வீடு திரும்புவார்


கொல்கத்தா, ஜன. 07

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பி.சி.சி.ஐ) தலைவர் சௌரவ் கங்குலியின் உடல் நிலை தேர்ச்சி பெற்றுள்ளது. இதனால் அவர் வைத்தியசாலையிலிருந்து இன்று வீடு திரும்புவார்.

முன்னதாக நேற்று முன்தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறுவார் என கூறப்பட்டது. எனினும், கங்குலிக்கு மேலும் சில பரிசோதனைகளை மருத்துவர்கள் முன்னெடுத்தனர். இதனால் அவர் அங்கிருந்து வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டது.

இலகு வகை மாரடைப்பால் பாதிக்கப்பட்ட அவரது இதயத்துக்கு செல்லும் இரத்தக் குழாயில் மூன்று அடைப்புகளில் ஒன்று ஆஞ்சியோ பிளாஸ்ரிக் சிகிச்சை மூலம் நீக்கப்பட்டது. அவரது உடல் நிலை குறித்து மருத்துவ குழுவினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

கடந்த ஜனவரி 2 ஆம் திகதி கொல்கத்தாவில் அமைந்துள்ள அவரது வீட்டில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது மார்பு வலி, தலையின் கனம், வாந்தி மற்றும் தலைச்சுற்றல் போன்றவற்றால் பாதிப்படைந்த நிலையில் கொல்கத்தா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## ஆஸிக்கு எதிரான இந்திய அணி:
# ரோஹித், சைனி இடம்பிடிப்பு

சிட்னி, ஜன. 07

சிட்னி டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ரோஹித் சர்மா, சைனி ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளார்கள்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் இன்று சிட்னியில் தொடங்குகிறது. இதில், விளையாடும் பதினொருவர் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

மயங்க் அகர்வால் நீக்கப்பட்டுள்ளார். உமேஷ் யாதவ், காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியுள்ளார். இதனால் சிட்னி டெஸ்டில் ரோஹித் சர்மா, சைனி ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். விஹாரி தனது இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

தமிழக வீரர் நடராஜன், சிட்னி டெஸ்டில் அறிமுகமாவார் என பலரும் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் விளையாடும் அணியில் இடம்பெறவில்லை.

அணிவிவரம்: ரஹானே (அணித் தலைவர்), ரோஹித் சர்மா, சப்மன் கில், புஜாரா, விஹாரி, ரிஷப் பந்த், ஜடேஜா, அஸ்வின், பும்ரா, சிராஜ், நவ்தீப் சைனி.

## இந்தியாவுடனான டெஸ்ட்:
# வோர்ணர் விளையாடுவார்

சிட்னி, ஜன. 07

இந்தியாவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்டில் தொடக்க வீரர் டேவிட் வோர்ணர் விளையாடுவார் என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிம் பெயின் அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி தற்போது டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. இதில், இன்று சிட்னியில் மூன்றாவது டெஸ்ட் போட்டி தொடங்குகிறது.

காயம் காரணமாக கடந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடாத டேவிட் வோர்ணர், சிட்னி டெஸ்டில் விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அணித் தலைவர் ரிம் பெயின் கூறுகையில்:

'நிச்சயமாக டேவிட் வோர்ணர் விளையாடுகிறார். அவர் அற்புதமான வீரர். அணி வீரர்களிடையே உற்சாகத்தை உருவாக்கி, நம்பிக்கையை ஏற்படுத்துபவர். அவர் நன்றாக விளையாட ஆரம்பித்தால் எதிரணிக்கு அழுத்தம் ஏற்படும். யாருக்கு எதிராக விளையாடினாலும் டேவிட் வோர்ணர் அணியில் இருந்தால் நாங்கள் மேலும் சிறந்த அணியாக இருப்போம். எங்களுடைய நடு வரிசையை காக்கக் கூடியவர். பந்துவீச்சாளர்கள் சோர்வில் இருக்கும்போது லபுசான், ஸ்மித் களமிறங்குவார்கள். அது எங்களுக்குச் சாதகமாக அமையும். அணியிலடேவிட் வோர்ணரின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். இதுவரை மிகச்சிறப்பாக விளையாடிய ஒரு வீரர்", என்றார்.



# இலங்கையர்களை மீள அழைத்தல் மாபியா நடவடிக்கையாக மாறியது

## இராஜாங்க அமைச்சர் அருந்திக விசனம்

கொழும்பு,ஜன.07

**கொரோனா வைரஸ் தொற்று அச்சத்தால் வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு மீண்டும் அழைத்துவரும் நடவடிக்கை தற்போது பணம் பறிக்கும் மாபியா செயல்பாடாக மாறியுள்ளது என இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இதனால் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை பாதிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் சிக்குண்டுள்ள இலங்கையர்களின் நிலைமையை குழுவொன்று தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றது. இந்த மாபியா கும்பல் வெளிநாடுகளிலிருந்து அழைத்துவரப்படுபவர்களை ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு அனுப்புவது குறித்தே கவனம் செலுத்துகின்றது அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவர கடுமையாகப் பாடுபட்ட இத்தாலி,



பிரான்ஸ், குவைத் உட்பட பல நாடுகளில் உள்ளவர்களை அரசாங்கம் அலட்சியம் செய்யக் கூடாது.

வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்படும் இலங்கையர்கள் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பது பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் தெரிய வந்தாலும் அவர்கள் சிலநாள்களுக்குத் தங்களை வீடுகளில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் விமானக் கட்டணங்களுக்காக இரண்டு இலட்சம் ரூபாயை செலுத்துகின்றனர். இலங்கைக்கு அழைத்து வரப்படுபவர்களின் பட்டியலில் பெயரைப் பதிவு செய்வதற்கு 20 ஆயிரம் ரூபா இலஞ்சமாக வழங்க வேண்டியுள்ளது. ஹோட்டல்களுக்கு 15 ஆயிரம் ரூபா செலவிட வேண்டியுள்ளது- என்றார். (எ)



# சட்டத்தால் மட்டும் சிறுவர் தொழிலை நிறுத்த முடியாது

கொழும்பு,ஜன.07

சட்டம் உருவாக்கி சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை நிறுத்த முடியாது. மாறாக குடும்பங்களின்வறுமையை இல்லாமலாக்க பொருளாதார வேலைத்திட்டம் அமைக்கப்படவேண்டும். அத்துடன் உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வந்து அரசாங்கம் நாட்டை அழித்துவிடக்கூடாது என தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தொழில் அமைச்சின் கீழ் கடை, அலுவலக ஊழியர், பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கு அமர்த்துதல், குறைந்தபட்ச வேதனங்கள் மற்றும் தொழில்சாலைகள் (திருத்த) சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா தொற்று தீவிரத்தால் உக்ரைன் நாட்டை முற்றாக மூடிவிடவேண்டும் என அந்த நாட்டுப் பிரதமர் அறிவித்திருக்கும் நிலையில் உதயங்கவின் தேவைக்காக அந்த நாட்டிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அழைத்து வரப்பட்டிருக்கின்றனர்.

எமது நாட்டுக்கு கொரோனா இரண்டாம் அலை வந்தது உக்ரைன் பிரஜையால் என சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அப்படியாயின் அரசாங்கம் உக்ரைன் சுற்றுலாப் பயணிகளை கொண்டுவந்து நாட்டை அழித்துவிடவா? முயற்சிக்கின்றது என கேட்கின்றேன்- என்றார். (எ)

# மத உரிமைக்கு முக்கியம் இப்போது வழங்கமுடியாது

## ஆளும் தரப்பு திட்டவட்டம்

கொழும்பு,ஜன.07

கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மத உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது. கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்து முன்னெடுத்து வருகின்றது.

பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனாவிலிருந்து விடுபடுவது இலகுவான காரியமல்ல. எம்மைக் காட்டிலும் பலம்மிக்க நாடுகள் கொரோனா வைரஸ் தாக்கத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்று தற்போது தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது. ஏனெனில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடல் தகனம் செய்யப்படும் என விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் சமூகத்தினரது உடல் தகனம் செய்யும் போது அவர்களின் மத உரிமை மீறப்படுகிறது என குறிப்பிடப்படுகின்றது. கொரோனா தாக்கத்தால் முஸ்லிம் சமூகத்தினர் மாத்திரம் இறக்கவில்லை.

ஏனைய மதத்தினரும் உயிரிழக்கின்றனர். கொரோனா தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் உடல் தகனம் செய்யப்படும் போது இந்து, பௌத்தம் மற்றும் கத்தோலிக்கம் ஆகிய மதத்தினரது இறுதிக் கிரியைகள் முன்னெடுக்கப்படுவதில்லை. இதனால் பிற மதத்தவர்கள் அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

எனவே கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மத உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது.

சுகாதாரத் தரப்பினரது தீர்மானங்களுக்கு முக்கியத்துவம்வழங்க வேண்டும் என மதத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறான நிலையில் அரசாங்கம் சுகாதாரத் தரப்பினரது தீர்மானத்துக்கே முன்னுரிமை வழங்கும்- என்றார். (எ)



# “வாய்ச்சொல் வீரர்களல்லர்” சுமந்திரன், சாணக்கியன் பிரதமருடன் திடீர் சந்திப்பு

கொழும்பு,ஜன.07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் தலையீடு காரணமாக கிழக்கு மாகாண மக்களின் மிக முக்கிய பிரச்னைகளில் ஒன்றுக்கு தீர்வு கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் காணப்படுகின்ற புதிய இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கு (Cardiology Unit - Cardiac Catheterization Laboratory) இரு கிழமைகளில் வரவிருந்த வைத்திய இயந்திர உபகரணங்களை (இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம்) இடைநிறுத்தி அதனைக் களுத்துறை மாவட்டத்துக்கு மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதுதொடர்பான விடயத்தைக் கையாளும் விவகாரம் இரா.சாணக்கியனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனால் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இரா. சாணக்கியன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இருதயவியல் பிரிவுக்கு கொண்டுவரப்பட வேண்டிய உபகரணங்கள் அனைத்தும் முன்பு தீர்மானித்தபடி அந்த வைத்தியசாலைக்கே கொண்டு வரப்பட வேண்டும் என இதன் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதுதொடர்பில் அவதானம் செலுத்திய பிரதமர் மஹிந்த, சுகாதார அமைச்சர் பவித்திர வன்னியாராச்சியை வரவழைத்து இருதயவியல் பிரிவுக்கான உபகரணங்களை உடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கையளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன்: “கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு வைத்தியசாலையிலும் இந்த உபகரணம் இல்லாமையால் பல வருடங்களாக மக்கள் உரிய நேரத்துக்கு சிகிச்சையின்றி பல சிரமங்களுக்கும் மத்தியில் வெளிமாகாணங்களுக்குச் சென்று சிகிச்சை பெற்று வருகின்ற னர்.

இதனால் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டிய பல உயிர்களை இழந்துள்ளோம். இப்பிரச்னை இனி முடிவுக்கு கொண்டுவரப்படும். எமது கட்சி மற்றும் எனது செயல்பாடுகள் அனைத்தும் எமது மக்கள் சார்ந்ததாகவே என்றும் இருக்கும். நாம் வாய்ச்சொல் வீரர்களல்லர்- எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

# கூட்டு ஒப்பந்தத்திலிருந்து உடன் வெளியேறவேண்டும்

## திகாம்பரம் வலியுறுத்து

ஹற்றன்,ஜன.07

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் கூட்டு ஒப்பந்தத்திலிருந்து தொழில்சங்கங்கள் வெளியேற வேண்டும். அதன் பின்னர் அனைவரும் இணைந்து போராடலாம் என தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவர் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி தமிழ் முற்போக்குக் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று ஹற்றன் மல்லியப்பு சந்தியில் இடம்பெற்றது.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

‘பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்ற உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும். அதனை நோக்கியே பேச்சுக்களைத் தொடரவேண்டும்.

அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா இல்லையேல் கையொப்பமிடமாட்டேன் என்று வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். அவரின் அறிவிப்பை வரவேற்கின்றோம். அதேபோன்று அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபா இல்லையேல் ஏனைய தொழில்சங்கங்களும் வெளியேறவேண்டும். அவ்வாறு வெளியில் வந்தால் அனைவரும் இணைந்து போராடலாம்- என்றார். (எ)



## மன்னாரில் நேற்று 400 பேரிடம் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன

### 179 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

மன்னார், ஜன. 07

மன்னார் - எருக்கலம்பிட்டி கிராமத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எருக்கலம்பிட்டியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து அப்பகுதிக்கு சென்ற சுகாதார அதிகாரிகள் குறித்த கிராமத்தை தனிமைப்படுத்தியதுடன், 200 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளையும் பெற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மன்னார் நகரிலும் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்காக எழுந்தமானமாக 200 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டன என்றும் கூறப்பட்டது.

மன்னாரில் தொற்று மேலும் பரவாமல் தடுப்பதற்கான விசேட முன்னேற்பாடுகள் குறித்தும் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன. (ஐ)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 07

பிரசித்தி பெற்ற நவாலி அட்டகிரி சிவன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில், சிவனடியார்கள் கொவிட -19 சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து பங்கு கொள்ளுமாறு சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவசிறி கா. துரைசாமி குருக்கள் கேட்டுள்ளார். (ஐ)

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - தமிழ்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - கணிதம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 07 - தமிழ்
2.00 மணி - தரம் 08 - தமிழ்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

# இனப்படுகொலை, போர் குற்றங்கள் நடந்தமைக்கு ஆதாரங்கள் இல்லை

## பாராளுமன்றில் சுரேன் ராகவன் உரை

கொழும்பு, ஜன. 07

**‘இலங்கையில் இனப்படுகொலை, போர் குற்றங்கள் நடந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. தமிழ் இனப் படுகொலை கல்வி வார சட்டத்தை கனடாவின் ஒன்ராறியோ பாராளுமன்றம் நிறைவேற்றினால், இலங்கையில் நல்லிணக்க செயல்பாடு முற்றாக சீர்குலைந்து விடும்”, இவ்வாறு தனது பாராளுமன்ற உரையில் தெரிவித்திருக்கிறார் சுரேன் ராகவன்.**

நேற்று முன்தினம் அவர் பாராளுமன்றில் உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கனடாவின் ஒன்ராறியோ பாராளுமன்றத்தில் அதன் இரண்டாவது வாசிப்பில் உள்ள 104 மசோதா ஒவ்வோர் ஆண்டும் மே 18 முதல் 25 வரை ‘தமிழ் இனப்படுகொலை கல்வி’ வாரத்தை நிறுவ முற்படுகிறது.

இது இயற்றப்பட்டால், ஒன்ராறியோ மாகாணத்தில் 4,800 பாடசாலைகள் சட்டப்படி இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்ததை தங்கள் மாணவர்கள் அனைவருக்கும் கற்பிக்க வேண்டும் . இது இலங்கையின் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கிறது. முன்னாள் இலங்கை குடிமகனான வல்வெட்டித்துறையை சேர்ந்த விஜய் தணிகாசலம், இந்த பிரேரணையை சமர்ப்பித்தார்.



இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் எமது நல்லிணக்க செயற்பாடு சீர்குலைந்து விடும். இலங்கையில் இனப்படுகொலை நடந்தது, போர் குற்றம் நடந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லையென ஐ.நா. அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தை நிறைவேற்றக் கூடாதென நான் கனடிய பிரதமர், ஒன்றாரியோ முதல்வரை கேட்டுக் கொள்கிறேன். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் எமது தற்போதைய, எதிர்கால நல்லிணக்க செயற்பாடுகளை முற்றாக சீர்குலைத்து, சமூகங்களை பிளவுபடுத்தி விடும்- என்றார்.

## மனோ எம்.பி. உடன் பதிலடி

கொழும்பு, ஜன. 07

கனடாவில் இனப்படுகொலை கல்வி வார சட்டம் நிறைவேறினால் அது இலங்கையின் நல்லிணக்கத்தை பாதிக்கும் என்று சபையில் சுரேன் ராகவன் எம்.பி. உரையாற்றியிருந்தார்.

அவரின் உரைக்கு சபையில் இருந்த தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் உடடினயாகவே பதிலடி வழங்கியிருந்தார்.

‘இல்லாத நல்லிணக்கத்தை வைத்து சுரேன் ராகவன் மாரடிக்கிறார்”, என்று அவர் விமர்சித்திருந்தார். (ஐ)

## ‘சூம்’ தொழில்நுட்ப முறையில் பூநகரியில் புத்தகம் வெளியீடு



கிளிநொச்சி, ஜன. 07

பூநகரி பிரதே செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆண்டு தோறும் வெளியிடப்படும் “பூந்துணர்” இதழின் 2020 ஆம் ஆண்டுக்கான நறவம் 10 இலத்திரனியல் மலர் நேற்று நடைபெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் அறிமுக உரையை பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரனும் வாழ்த்துரையை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸும் வழங்கினர்.

அண்மையில் வடக்கு மாகாணத்தில் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக அரச திணைக்களம் ஒன்றில் நடைபெற்ற முதலாவது வெளியீட்டு நிகழ்வு இது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், பிரதேச செயலகம் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் சூம் தொழில்நுட்பம் மூலம் பங்கேற்றனர். (ஐ)

## வடக்கில் வாக்காளர்களாக பதிவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### சில கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மட்டும்

கொழும்பு, ஜன. 07

2020ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கு வடக்கு மாகாணத்தின் சில கிராம சேவகர் பகுதிகளில் வசிக்கும் வாக்காளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில், நகுலேஸ்வரம், காங்கேசன் துறை மேற்கு, காங்கேசன் துறை மத்தி., காங்கேசன் துறை தெற்கு, கட்டுவன், தென்மலை, வறுத்தலை விளான், குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு, வயாவிளான் கிழக்கு, வயாவிளான் மேற்கு, மயிலிட்டி வடக்கு, மயிலாடுதுறை தெற்கு, தையிட்டி வடக்கு, தையிட்டி மேற்கு, மயிலிட்டித்துறை வடக்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, பலாலி வடமத்தி., பலாலி மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் வாக்காளர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் ஆனையிறவு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி, மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த முள்ளிக்குளம் கிராம சேவகர் பகுதிகளிலும் வசிப்போரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தற்பொழுது வடக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தால் தற்போது எந்தவொரு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும், ஏனைய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டவர்களுக்காக அந்த தேர்தல் மாவட்ட அலுவலத்தின் மூலமும் சம்பந்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் விண்ணப்பதாரர்கள் வெளிநாடுகளில் இருப்பார்களாயின், அவர்களின் விண்ணப்ப படிவம் சம்பந்தப்பட்ட நாட்டின் இலங்கை தூதரக அலுவலகம் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu

# ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் அடாவடி: தந்தை, மகன் உட்பட மூவர் காயம்

## நடவடிக்கை எடுக்க பொலிஸ் பின்னடிப்பு

வவுனியா, ஜன.07

**மதுபோதையில் சிறுவனை தாக்கிய ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவாளர்களை தடுக்க முயன்றவர்கள் மீதும் கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தந்தை, மகன் உட்பட மூவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**

**இந்தச் சம்பவம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.**

இதில், ப. மகேஸ்வரன் (வயது 54), அவரது மகனானா ம. நிக்ஸன் (வயது 24), அவர்களின் உறவினரான த. ஜனகன் (வயது 29) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது:

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுபோதையில் நின்றவர்கள் சிலர் சிறுவன் ஒருவரை தாக்கியுள்ளனர். இதை, அப்பகுதியில் நின்ற அவர்களின் உறவினர்கள் தடுக்க முயன்றனர். ஆனால், மதுபோதையில் நின்ற ஈ.பி.டி.பி. ஆதரவு கும்பல் அவர்களை மிகக் கடுமையாகத் தாக்கியது இதில் அவர்கள் காயங்களுக்கு இலக்காகினர்.

குறித்த நபர்கள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நிற்பவர்கள் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்த போதும், அவர்கள் தாக்குதலாளிகளுக்கு எதிராக நேற்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்குக் காரணமானவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காயப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளனர் என்றும் அது தொடர்பிலும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# யாழில் சுழல் காற்றால் ஒன்பது வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 07

சுழல் காற்றின் தாக்கத்தால் யாழ்ப்பாணம் கல்லுண்டாயில் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் வீசிய சுழல் காற்றால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்டனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாயில் நவாலி தெற்கு கிராம சேவகர் பிரிவில் நேற்று மாலை சுழல் காற்று வீசியது. இதில் 9 வீடுகளின் கூரைகள் காற்றால் தூக்கி வீசப்பட்டன. இதனால், 12 குடும்பங்களை சேர்ந்த 41 பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர்கள் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவித்தனர். உடனடி நடவடிக்கையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தறப்பாள்கள் வழங்கப்பட்டன. (ஐ-3)

# கொரோனா தொற்று பரவலால் பல நூறு மரணங்கள் தவிர்ப்பு!

கொழும்பு, ஜன. 07

கொரோனா தொற்று பரவல் காரணமாக விதிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் நடமாட்ட கட்டுப்பாடுகளால் 2020ஆம் ஆண்டில் நூற்றுக்கணக்கானோரின் மரணங்கள் தவிர்க்கப்பட்டன. கடந்த ஆண்டில் பதிவான தற்கொலைகள், கொலைகள் மற்றும் வாகன விபத்துகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த நிலைவரத்தின் அடிப்படையிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவுக்கு அறிக்கையிடப்பட்ட தகவல்களுக்கு அமைய, வாகன விபத்துக்களால் 2020ஆம் ஆண்டில் 1844 பேர் உயிரிழந்தனர். 2019இல் 2689 பேர் விபத்துக்களால் உயிரிழந்தனர். ஒப்பீட்டு அடிப்படையில் வாகன விபத்துக்களால் ஏற்பட்ட மரணம் சுமார் 800ஆல் குறைவடைந்துள்ளது.

கொரோனா பரவலால் நடைமுறையில் இருந்த ஊரடங்கும், பயணக் கட்டுப்பாடுகளுமே இதற்குக் காரணம்.

இதேநேரம், 2019இல் 7,718 பேர் வாகன விபத்துகளால் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். 2020இல் 5,284 பேரே காயமடைந்தனர்.

இலங்கையில் கடந்த 2020இன் முதல் 10 மாதங்களில் 302 கொலைகள் பதிவாகின. ஆனால், 2019ஆம் ஆண்டு 479 கொலைகள் பதிவாகியுள்ளன. ஒப்பீட்டடிப்படையில் கொலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

# துறைமுகங்கள் சேவை அத்தியாவசியமாகிறது

கொழும்பு, ஜன. 07

துறைமுகங்கள் சேவையை அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக மாற்றுவது தொடர்பில் வெளியாகவுள்ள வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றின் அனுமதிக்காக கையளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகலைவ துறைமுகங்கள் சேவைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

துறைமுகங்கள் சேவைகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (ஐ)



# பாடசாலை மட்ட விளையாட்டு போட்டிகளை நடத்த நடவடிக்கை

## சுகாதார, விளையாட்டு அமைச்சுகள் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 07

புதிய சுகாதார வழிகாட்டுதல்களின்படி பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மற்றும் இரு அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் பங்கேற்ற கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

இதன்போது, மேல் மாகாணத்தைத் தவிர வேறு மாகாணங்களில் பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்றும், வைரஸ் ஆபத்து அதிகம் உள்ள மேல் மாகாணம் உள்பட தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் எந்த வகையிலும் விளையாட்டுகளில் ஈடுபடக்கூடாது என்றும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதுபோன்ற அதிக ஆபத்துள்ள பகுதிகளில் உள்ள மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டால் வைரஸ் பரவக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட தற்போதைய சுகாதார வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப இல்ல மெய்வல்லுனர் போட்டிகளை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், குழு விளையாட்டு மற்றும் பாடசாலை பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கொரோனா தொற்று நோய் அறிகுறி உள்ள மாணவர்கள் ஒருபோதும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுதல் கூடாது என்றும், தற்போது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்கள் பாடசாலை விளையாட்டுகளை முறையாகத் தொடங்குவதில் கவனம் செலுத்துவதற்குத் தேவையான வகையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

மணமகன் விபரம்
16153 | வே | 1982
மாதகல் | இந்து | செவ் : 4
Manager | Australia
விசாகம் (துலாம்) | 173 செ.மீ

16030| வே | 1986
இந்து | இலங்கை
Production Manager
சித்திரை (கன்னி); 172 செ.மீ

16120 | வே | 1988
கரவெட்டி | இந்து |செவ் : 7
Software Engineer
அத்தம் (கன்னி)| 185 செ.மீ

15595 | கோ| 1990
இளவாலை| இந்து
SW Engineer | சிங்கப்பூர்
அத்தம் (கன்னி) | 180செ.மீ

15547 | வே | 1992
திருநெல்வேலி | இந்து
Doctor | SL | 174 செ.மீ
பூரம் (சிம்மம்)

மணமகள் விபரம்
16165 | கோ | 1989
இந்து | SL | செவ் : 2
Management Assistant
அத்தம் (கன்னி)

15700 | வே | 1991
பருத்தித்துறை| இந்து
Audit | செவ் : 4
சதயம் (கும்பம்)

15673 | வே | 1994
புத்தூர்|இந்து |SL |158செ.மீ
Pub. Relation Manager
அத்தம் (கன்னி)|சூ–செவ் : 7

15784 | ந | 1997
மானிப்பாய் | இந்து
Technical officer | SL
மகம் (சிம்மம்)

15940 | ப | 1998
அரியாலை | இந்து
A/L | SL | சூ–செவ் : 12
பூரட்டாதி (கும்பம்)|168 செ.மீ

20, கே.கே.எஸ் வீதி,, கொக்குவில், யாழ்ப்பாணம்

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதி
பெண்கள் மருத்துவம்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க

**பகல்**
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி : அந்த நாலு பேர்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
12.00 மணி : ராஜா ராணி

**பகல்**
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : ஒய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துாங்கும் நேரம்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி - தரம் 07 - தமிழ்
6.45 மணி - தரம் 08 - தமிழ்
7.30 மணி - தரம் 09 - கணிதம்
8.15 மணி - தரம் 10 - கணிதம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி - தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி - தரம் 07 - தமிழ்
2.00 மணி - தரம் 08 - தமிழ்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தமிழ்
7.00 மணி - க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு மாதிரி வினாத்தாள் ஆங்கிலம்

## ஓம் நிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி: சுப்ரபாதம்
6.30 மணி: சுப்ரபாதம்
07.00 மணி: இன்றைய சிந்தனை
07.05 மணி: இன்றைய நாள்
07.20 மணி: சின்மய சிந்தனை
07.30 மணி: மங்கள இசை
08.00 மணி: அருளுரை
08.30 மணி: திருவாசகம்
09.00 மணி: யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் திருவிழா
10.00 மணி: ஐயப்பன் பாடல்கள்
10.3 மணி: பஜனை
11.00 மணி: பக்திமலர்
12.00 மணி: திரையில் பக்தி
12.30 மணி: யாழ்ப்பாணம் புங்குடுதீவு பட்டையார் அம்மன் கோவில் திருவிழா

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
9.00 மணி - ஜெபமாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி

**பகல்**
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.